
GOKULAM

கோகுலம்

ப்டெம்பர் 2005 ❖ ரூ.6/- ❖ 96 பக்கங்கள்

குழந்தைகளின் குதூகலம்!

ராகுல் திராவிட் போஸ்டர்



எல்லோரும் படிக்கலாம்; இந்தியாவை உயர்த்தலாம்!

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com


சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



செப்டெம்பர் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...

ஹாய் ஃபிரெண்ட்ஸ்!

செப்டெம்பர் 9 உலக எழுத்தறிவு நாள்.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அந்த நாட்டு மக்களின் கல்வியறிவு முக்கியப் பங்கு வகிக்கிறது.



எல்லோரும் படிக்கலாம்; இந்தியாவை உயர்த்தலாம்!

கல்வி அறிவு அதிகம் பெற்ற நாடுகளே வளர்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருப்பதை நம்மால் காண முடிகிறது.

உலக மக்கள் தொகையில் இரண்டாம் இடத்திலிருக்கும் நம் நாடு, முழுமையாக கல்வி அறிவு பெற்ற நாடாக இல்லை என்பது வருத்தம் தரும் விஷயம். கல்வியறிவில் பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த மோசமான நிலை இன்று இல்லை. சில மாநிலங்கள் அதிக எழுத்தறிவு பெற்றும், பல மாநிலங்களில் படிக்காதவர்கள் நிறைந்தும் காணப்படுகிறது. அதிலும் பெண்களின் கல்வியறிவு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்நிலையை மாற்ற நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

நமக்குத் தெரிந்து படிக்காத குழந்தைகள் இருந்தால் படிப்பின் அவசியத்தைக் கூறி அவர்களைப் பள்ளியில் சேர்க்க வேண்டும்.

ஒன்றிரண்டு வகுப்பு படித்து விட்டு பாதியிலேயே பள்ளிக் கூடத்தை விட்டு நின்றவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க வேண்டும்.

நம் வீட்டுக்கு அருகில், நாம் வாழும் பகுதிகளில் படிக்காத பெரியவர்களை அழைத்து படிக்கச் சொல்லித் தர வேண்டும். நமக்குத் தெரிந்ததை, தெரியாதவர்களுக்குச் சொல்லித் தரும்போது மனதில் நிறைவு ஏற்படும்.

உங்கள் பாடத்தை முடித்து விட்டு ஓய்வு நேரங்களில், விடுமுறை நாட்களில் பாடம் சொல்லித் தரலாம்.

படித்தவர்கள் படிக்காதவர்களுக்குப் படிக்கச் சொல்லித் தருவது என்பது சேவையல்ல; அது நம் ஒவ்வொருவரின் கடமை.

எல்லோரும் படிக்கலாம்;
இந்தியாவை உயர்த்தலாம்!

அன்புடன்
உங்கள் **கோகூ**

அட்டையில்: ஸ்நேகா
வண்ணப்படம்: ஸ்ரீஹரி

பரிசு ஜோக்ஸ்



''மழைக் காலத்தில்தான் போர் செய்வேன் என்று மன்னர் அறிவித்திருக்கிறாரே, ஏன்?''

''அப்போதுதான் போர் 'டிரா' வில் முடியும்!''

- டி. அருண்குமார்,
பத்தாம் வகுப்பு,
அழகிரி சுரேஷ் அரசு
உயர்நிலைப் பள்ளி,
ஆலாங்கொம்பு

''டைட்டானிக் கப்பல் எப்படி கவிழ்ந்தது?''

''டைட்டானிக் கதாநாயகி கன்னத்தில் கையை வச்சிட்டு இருந்ததால்...!''

- டி. சாலமன்,
ஒன்பதாம் வகுப்பு,
அழகிரி சுரேஷ் அ.உ.நி.பள்ளி,
ஆலாங்கொம்பு



மழையில் போர்!



''கமல்ஹாசனுக்கு தேசிய விருது கொடுத்தது சரி. ஆனால் விக்ரமுக்கு தேசிய விருது கொடுத்தது தப்பு.''

''ஏன்?''

''கமல் இந்தியன். விக்ரம் அந்நியன் ஆச்சே!''



''ஏன், மாலா என் அண்ணன் என்னை அடிச்சப்ப நீ பார்த்துக் கிட்டு சும்மாதானே இருந்தே?''

''பின்னே, அவங்களைக் கை தட்டி பாராட்டினா நீ கோவிச்சுக் குவியே...!''

- ஆர். தங்கராஜ்,
பெரிச்சிபாளையம்


அரசன் யார்?
கதை: லி. ஆரோக்கியதாஸ்
படம்: மகேஸ்
செண்பகக் காட்டின் அரசனான சிங்கம் மகா சோம்பேறி. காட்டு நடப்புகள் எதையும் தெரிந்து கொள்ளாமல் குகையில் தூங்கிக் கொண்டிருக்கும்.
அன்று சிங்கத்துக்குப் பசியெடுக்க, மெதுவாக குகையை விட்டு வெளியே வந்தது.
சே! கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரு பிராணியையும் காணவில்லையே!
காடு முழுவதும் சுற்றிவிட்டு ஏமாற்றத்துடன் குளத்தருகே வந்தது. அப்போது -
ஆஹா! தண்ணீர்க் குடிக்கும் மானைப் பிடித்து விட வேண்டியதுதான்!
ஐயோ! அகப்பட்டுக் கொண்டேனே! எப்படியாவது தப்பிக்கணுமே!
ஏய், சிங்கமே! என்னை ஏன் பிடித்திருக்கிறாய்?
ஹி...ஹி... நீதான் எனக்கு விருந்து!


என்ன தைரியமிருந்தால் இக் காட்டின் அரசனான என்னைக் கொன்று தின்னப் போவதாகச் சொல்வாய்?
ஏய்... நான்தான் அரசன்.
இன்றிலிருந்து நான்தான் அரசன். எனக்கு ஆபத்து நேர்ந்தால் மற்ற விலங்குகள் உன்னைச் சும்மா விடாது.
எப்படி? சரி, நீ அரசன் என்பதற்கு என்ன ஆதாரம்?
நான் முன்னால் போக, என் பின்னால் நீ வா. மற்ற விலங்குகள் என்னைக் கண்டு பயந்து ஓடுவதை நீ பார்க்கலாம்.
சரி போ.
சிங்கம் வருவதைப் பார்த்த மற்ற விலங்குகள் பயந்து ஓடின.
நீங்கள்தான் அரசன் என்பதைப் புரிந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள், வருகிறேன்.
அட முட்டாளே!
புத்திசாலித்தனமாக தப்பித்த மகிழ்ச்சியில் மான் பாடிக்கொண்டே சென்றது.

தயக்கத்திற்குத்

அன்புள்ள டாக்டருக்கு,

நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். வகுப்பில் ஆசிரியர் பாடங்களை நடத்தும்போது சந்தேகம் கேட்க விரும்புவேன். ஆனால் எனக்குள் இயல்பாகவே அமைந்துள்ள தயக்க உணர்வு காரணமாக கேள்வி கேட்காமல் இருந்து விடுவேன். அதுபோல் வீட்டில் புதிய விருந்தினர் யாராவது வந்தால் அவர்களோடு பேசத் தயங்குவேன். என் தயக்கத்தைப் போக்க ஆலோசனை கூறுங்கள் டாக்டர்.

- சொ. பார்த்திபன்,
திண்டுக்கல்

வகுப்பில் கேள்வி கேட்கத் தயக்கம் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் உனக்குத் தன்னம்பிக்கைக் குறைவாக இருப்பதுதான். ஆசிரியரிடம் சந்தேகம் கேட்டால் ஆசிரியர் என்ன சொல்வாரோ? பதிலுக்கு உன்னிடம் ஆசிரியர் ஏதாவது கேள்வி கேட்டு அதற்கு உன்னால் பதில் சொல்ல முடியவில்லை என்றால் அசிங்கமாகி விடுமோ என்று அச்சப்படுகிறாய்.

வகுப்பில் சந்தேகம் கேட்பதற்கும் மனதில் தைரியம் வேண்டும் பார்த்திபன். மனதைரியம் பெற வேண்டுமென்றால் உன் திறமைகள் மீது உனக்கு நம்பிக்கை வர வேண்டும். முதலில் படிப்பில் உன் திறமைகளை வளர்த்துக் கொள். அன்றைக்கு நடத்திய பாடங்களை அன்றன்றைக்குப் படித்து விடு. வகுப்பில் இதுவரை கற்பித்தவை அனைத்துமே உனக்குத் தெரியும் என்கிற நம்பிக்கை உனக்கு ஏற்பட்டு விட்டால் பாடத்தில் சந்தேகம் கேட்கத் தயக்கம் உண்டாகாது.

அடுத்து, வகுப்பில் அடுத்த நாள் நடத்த இருக்கும் பாடத்தை முதல் நாளே வாசித்துவிட்டுச் செல்லும் பழக்கத்தை நடைமுறைப்படுத்து. அந்தப் பாடத்தை வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தும்போது ஊன்றிக் கவனி. சந்தேகம் கேட்டால் ஆசிரியர் என்ன சொல்வாரோ என்று தயங்குவதைக் காட்டிலும் கேட்டுத்தான் பார்ப்போமே என்று மனதிற்குள் தைரியத்தை வரவழைத்துக் கொள். புரியாததை ஆசிரியரிடம் கேள். அவர் ஒருமுறை உன் சந்தேகத்



டாக்டர் கு.கணேசன்



தடை போடு!

தைத் தீர்த்து விட்டால் உனக்கே ஆச்சரியமாக இருக்கும். ஆசிரியர் அவராகக் கற்பிக்கும்போது விளக்கம் சொன்னதைவிட நீ சந்தேகம் கேட்டபோது சொன்ன விளக்கம் விரிவாக இருந்திருக்கும். இப்போது உனக்குப் பாடம் மிக எளிதாகப் புரிந்திருக்கும். வகுப்பில் ஆசிரியர் உனக்கு உதவி செய்யவே உள்ளார் என்பதையும் புரிந்திருப்பாய். அதற்குப் பிறகு சந்தேகம் கேட்கத் தயக்கமே வராது.

அடுத்து இன்றிலிருந்து வீட்டிற்கு வரும் போனை முதலில் நீதான் எடுத்துப் பேச வேண்டும். வீட்டிற்குத் தேவையானதை வாங்கி வர நீதான் கடைக்குச் செல்ல வேண்டும். வீட்டிற்கு வரும் உறவினர்கள், விருந்தினர்கள் அல்லது நண்பர்கள் பற்றி உன் பெற்றோர் மூலம் முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டால், அவர்களை வரவேற்பதிலும் பேச்சைத் தொடங்குவதிலும் சிரமம் இருக்காது. உங்கள் ஊரில் உள்ள சிறுவர் மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்து செயல்படு. அப்போது பலருடன் பழகும் வாய்ப்பு உனக்குக் கிட்டும். பள்ளியில் நடக்கும் விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, பட்டிமன்றம், நாடகம் போன்றவற்றில் கலந்து கொள். உன்னைவிட வயதில் குறைந்த மாணவர்களுக்கு ஓய்வு நேரத்தில் பாடம் நடத்து. இப்படி செய்யும்போது உன் தயக்க உணர்வு தானாகவே மறைந்துவிடும்.



திவ்யாக்குட்டியும் குருவித் தங்கச்சியும்!

திவ்யாக்குட்டி ரொம்பச் சுட்டி. எந்த நேரமும் துருதுருன்னு ஏதாவது குறும்பு செய்துக்கிட்டேயிருப்பாள். பால்வாடிக்குப் போன சிறிது நேரத்திலேயே அங்கேயுள்ள பிள்ளைகளை அடித்தும் கிள்ளியும் அந்தப் பிள்ளைகளின் தட்டுகள், புத்தகங்களைப் பறித்து வெளியில் எறிந்தும் விஷமம் செய்வாள். டீச்சர் மிரட்டியதும் தன் சிலேட்டையும் பையையும் வெளியில் போடுவது போல் போட்டு, அவற்றை எடுப்பது போல் வெளியில் வந்து எடுத்துக் கொண்டு, 'குடு குடு'வென வீட்டிற்கு ஓடி வந்து விடுவாள்.

இதற்காக டீச்சர், திவ்யா பால்வாடிக்கு வந்ததும், பையையும் சிலேட்டையும் வாங்கி எட்டாத இடத்தில் வைத்து விடுவார். தான் கொண்டு போன பொருளைத் திரும்ப வாங்காமல் வீட்டிற்கு வரமாட்டாள் திவ்யாக்குட்டி.

அன்று திவ்யாக்குட்டிக்குப் பிறந்த நாள். அப்பா வாங்கி வந்த புது கவுனையும் புது நெக்லசையும் அணிந்து கொண்டு, அம்மா தந்த சாக்லெட்டுகளையும் பையில் வைத்துக்கொண்டு



இரண்டாம் பரிசுக் கதை



பால்வாடிக்கு வந்தாள். டீச்சருக்கு சாக்லெட் கொடுத்தாள். எல்லாப் பிள்ளைகளுக்கும் சாக்லெட் கொடுத்தாள்.

சிறிது நேரத்தில் தன் குறும்புகளைத் தொடங்கினாள். ஒரு பிள்ளையை அடித்தாள்; இன்னொரு பிள்ளையைக் கிள்ளினாள்; மற்றொரு பிள்ளையைக் கீழே தள்ளினாள்.

எல்லாப் பிள்ளைகளும் ''டீச்சர்... டீச்சர்... திவ்யாக் குட்டி அடிக்கிறா'' என்று அலறத் தொடங்கினர்.

இதைக் கேட்டதும் டீச்சர் திவ்யாக்குட்டியைத் தூக்கி வந்து வெளித்திண்ணையில் உட்கார வைத்தார்.

சிறிது நேரம் சென்றது. திவ்யாக்குட்டி திண்ணையை விட்டு இறங்கினாள். கால் போன போக்கில் நடந்தாள். ஊருக்கு வெளியில் இருந்த காட்டை அடைந்தாள். இதுவரை இப்படிப்பட்ட காட்டை அவள் பார்த்ததே இல்லை!

காட்டில் பெரிய பெரிய மரங்கள் இருந்தன. பலவிதமான பூக்

கள் பூத்துக்குலுங்கின. டீச்சர் சொல்லும் வனதேவதைக் கதையில் வரும் காடு போலவே இருந்தது.

"இதுதான் வனதேவதையின் காடோ? இங்குதான் வனதேவதை இருக்குமோ? அதோ அந்த வீடு வனதேவதை வீடோ? பார்க்கணும்" என்று தனக்குள் பேசிக்கொண்டவாறு ஒரு மரத்தடியில் அமர்ந்தாள்.

அப்போது ஒரு குருவி, "கிக்கிக்கீ... கிக்கிக்கீ...." என்று பாடிக்கொண்டு, திவ்யாவின் அருகில் வந்து உட்கார்ந்தது.

"ஹை! குருவி!" என்று கைகொட்டிச் சிரித்தாள். "ஏ... குருவி! நீ ரொம்ப அழகாயிருக்கே!" என்றாள். இதைக் கேட்டதும் குருவி, திவ்யாக் குட்டியைப் பார்த்து, "நீயும்தான் ரொம்ப அழகாயிருக்கே, வனதேவதை போல" என்றது.

"வனதேவதை என் மாதிரியா இருக்கும்! குருவித் தங்கச்சி! நீ வனதேவதையைப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லேக்கா! எங்க அப்பா, அம்மா சொல்லுவாங்க!"

"உன் அப்பா, அம்மா எங்கே?"

"அவங்களைத்தான் வேட்டைக்காரன் பிடிச்சுக்கிட்டுப் போயி வித்துட்டானே!"

"அடப்பாவி! அவன் ரொம்பப் பொல்லாதவனா?"

"ரொம்பப் பொல்லாதவன். இப்பக் கூட என் நண்பர்களைக் கண்ணி வச்சுப் பிடிச்சுக் கூண்டுல அடைச்சு வைச்சிருக்கான். நாளைக்குச் சந்தைக்கு கொண்டு போவான்."

"இங்கே வந்து என்னையும் பிடிச்சுட்டுப் போவனா குருவித் தங்கச்சி?" என்று அச்சத்துடன் கேட்டாள் திவ்யா.

"நீ மனிதக் குருவிலக்கா! உன்னைப் பிடிக்கமாட்டான். நாங்கள் பறவைங்க" என்ற குருவி திவ்யா அணிந்திருந்த நெக்லசைக் கூர்ந்து பார்த்தது.

"நெக்லஸ் அழகா இருக்கு. அதைக் குடு பார்த்துட்டுத் தர்றேன்."

நெக்லசைக் கழட்டிக் கொடுத்தாள் திவ்யா. அதை வாங்கிய குருவி, வாயில் கவ்வியபடி பறக்கத் தொடங்கியது. இதைப் பார்த்துத் திடுக்கிட்டாள் திவ்யா.

"ஏ...குருவி என் நெக்லசைக் கொடு" என்றவாறு குருவியைத் தொடர்ந்து ஓடினாள். குருவியும் மெதுவாகப் பறந்து சென்றது.

குருவி தூரத்தில் இருந்த வீட்டிற்குச் சென்றது. திவ்யா கத்திக் கொண்டே தொடர்ந்தாள். அங்கே ஒரு கம்பிக் கூண்டில் நிறையக் குருவிகள் அடைத்து வைக்கப்பட்

யார் இந்தப் பிரபலம்?



பிறந்த வருடம் - 1925

டிருந்தன.

நெக்லசைத் தூக்கி வந்த குருவி கூண்டின் மேல் அமர்ந்தது. திவ்யா கூண்டுக்கு அருகில் வரவும் நெக்லசைக் கூண்டுக்கு மேலே இருந்த ஓட்டை வழியாகப் போட்டு விட்டு, "கிக்கீ... கிக்கீ" என்று கத்திக் கொண்டு பக்கத்தில் உள்ள மரத்தில் அமர்ந்தது.

திவ்யா கூண்டுக்குள் கிடந்த நெக்லசை எடுக்க முயன்றாள். முடியவில்லை. தன் இரு கைகளாலும் கூண்டுக் கம்பியைப் பிடித்துக்கொண்டு இரண்டு பக்கமும் இழுத்து அகற்றினாள். கை நுழையும் அளவுக்கு ஓட்டை கிடைத்தது. கையை உள்ளே நுழைத்து நெக்லசை எடுத்து அணிந்துகொண்டாள். குருவியைத் திட்டிக் கொண்டே வந்த வழியில் திரும்பினாள்.

திவ்யா செய்த ஓட்டை வழியாகக் கூண்டுக்குள் இருந்த குருவிகளெல்லாம் வெளியே வந்து பறந்தன.

திவ்யா முதலில் அமர்ந்திருந்த மர நிழலுக்கு வந்த போது எல்லாக்குருவிகளும் "கிக்கீ... கிக்கீ..." என்று பாடிக் கொண்டு சந்தோஷமாக விளையாடின.

"ரொம்ப நன்றிக்கா. வன தேவதை மாதிரி வந்து என் ஃபிரண்ட்ஸ்களையெல்லாம் கூண்டிலிருந்து காப்பாத்திட்டே" என்றது குருவி. இதைக் கேட்டதும் திவ்யாவுக்கு குருவிமேல் இருந்த கோபம் போயிற்று. 'தன் ஃபிரண்ட்ஸ்களைக் காப்பாற்ற இப்படியொரு தந்திரம் செய்திருக்கு இந்தக் குருவி' என்று உணர்ந்



''இப்போ நம்ம ஊர் தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி அலசப் போறோம்!''

''அலசப் போறீங்களா! அதுக்கு தண்ணி இருக்கா?''

- அ.ப. ஜெயபால்

தாள்.

"குருவித் தங்கச்சி! நான் தான் உனக்கு நன்றி சொல்லணும். நீயும் ஃபிரெண்ட்ஸும் எவ்வளவு சந்தோசமா இருக்கீங்க! நானுந்தான் இருக்கேனே..." என்றவள், "இனிமேல் நானும் என் ஃபிரண்ட்ஸ்களோட சந்தோஷமா இருப்பேன். வர்றேன் தங்கச்சி" என்று கையாட்டிவிட்டு பால்வாடியை நோக்கி ஓடினாள் திவ்யாக் குட்டி.

"ஏய் திவ்யா... எழுந்திரு... அதுக்குள்ளே தூக்கமா?" என்று எழுப்பினார் பால்வாடி டீச்சர். திடுக்கிட்டு விழித்த திவ்யாக் குட்டி, குருவித் தங்கச்சியையும் அதனுடைய ஃபிரண்ட்ஸ்களையும் காணாது சுற்றும் முற்றும் பார்த்தாள். மற்ற குழந்தைகளையும் பார்த்தாள். தன் பையையும் சிலேட்டையும் எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்.

- வெ. பவித்ரா, ஏழாம் வகுப்பு,
பாபா பள்ளி, திருப்பத்தூர்

ஹாய் ஃபிரெண்ட்ஸ்! என்னைத் தெரியுமா உங்களுக்கு? பார்க்க மயில் மாதிரி இருக்கிறேன்; ஆனால் மயில் இல்லை. என் பெயர் காசோவரி (cassowary). பறக்க முடியாத பறவைகளில் எங்கள் இனமும் ஒன்று. ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பறவைகளில் நாங்கள் பெரியவர்கள். நியூகினியா மற்றும் குயின்ஸ்லாந்தில் மூன்று வகை காசோவரிகள் காணப்படுகின்றன.

மழைக்காடுகள்தான் எங்கள் வசிப்பிடங்கள். என் தலையின் மேல் வலிமை வாய்ந்த கொண்டைக் கொம்பு உண்டு. அடர்ந்த காடுகளுக்குள் செல்லும்பொழுது எதிலும் மோதி விடாமல் விலக்கிச் செல்ல





இது உதவுகிறது. என் தலையும் கழுத்தும் நீல நிறத்தில் இருக்கிறது. கழுத்துப் பகுதியில் சிவப்பு நிறத்தில் இரண்டு

எஸ். சுஜாதா

காசோவரி



சதைகள் தொங்குகின்றன. உடலைச் சுற்றிக் கறுப்பு வண்ண இறகுகள் மூடியிருக்கின்றன. கால்கள் ரொம்ப வலிமையாகவும் சாம்பல் நிறத்திலும் காணப்படும். ஒவ்வொரு காலிலும் மூன்று விரல்கள். இந்த விரல்கள் எதிரிகளிடம் சண்டையிடவும் காப்பாற்றிக் கொள்ளவும் உதவுகின்றன.

எனக்குப் பிடித்த உணவு வகைகள் பழங்களும் கொட்டைகளும்தான்! எப்பொழுதாவது இறந்த சிறு பிராணிகள், பறவைகளைச் சுவைப்பதுண்டு.

காடுகளில் அலையும் போது என் உடல் பட்டு, செடிகளின் விதைகள் காடு முழுவதும் பரவுகின்றன. இதனால் தாவர வளர்ச்சி என் மூலம் நடைபெறுவது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. ஆண் பறவையை விட பெண் சற்றுப் பெரிதாக இருக்கும். மே முதல் நவம்பர் வரை முட்டையிட்டு அடை காக்கும் காலம். பெண் காசோவரி 3 முதல் 6 முட்டைகளை இடும். ஆஸ்ட்ரிச், ஈமுக்கு அடுத்து எங்களின் முட்டை





1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஜூலை இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமான வர்கள் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சரியான விடை:

I. 1. ஆம் , 2. அமெரிக்கா, கனடா, 3. ஆம், 4. ஆம், 5. ஆம்

II 1. ஆப்பிள், 2. ப்ளம், 3. மங்குஸ்தான், 4.ஸ்ட்ராபெரி, 5. திராட்சை, 6. செர்ரி

பரிசு யாருக்கு?

1. எம். அகில் பாலாஜி, அனிதா குமரன் மெட்ரிக் மே.நி. பள்ளி, தண்டுபத்து.

2. பி. தினேஷ்குமார், கோவை.

3. எம்.எம்.வி. ஹரி, பெரம்பூர், சென்னை.

4. ஒய். மணிகண்ட பிரபு, பன்னிரண்டாம் வகுப்பு, எஸ்.எஸ்.எம். மெட்ரிகுலேஷன் பள்ளி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

5. வி. ராதாகிருஷ்ணன், கொரநாட்டு கருப்பூர், தஞ்சை மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!


கள்தான் பெரியவை. பச்சை மற்றும் நீலம் கலந்த நிறத்தில் முட்டைகள் இருக்கும். முட்டையிட்டவுடன் பெண் பறவை சென்றுவிடும். ஆண் பறவை அடைகாக்கும். 8 வாரங்களில் முட்டையிலிருந்து குஞ்சு வெளி வரும். குஞ்சு பழுப்பு வெள்ளையில் பிரௌன் நிறக் கோடுகளுடன் இருக்கும். ஆண் பறவை 9 மாதம் வரை குஞ்சை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ளும். (எவ்வளவு பொறுப்பு!) குஞ்சு மூன்று வயதை அடையும்போது முதிர்ச்சியடையும்.

எங்களின் ஆயுட்காலம் 50 ஆண்டுகள். சாதாரணமாக 60 கிலோ எடைக்குக் குறையாமல் இருப்போம். என் உறவினர்களில் ஒருவர் 83 கிலோ இருந்ததாக என் அப்பா சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன்.


மற்ற இனங்களைப் போலவே எங்கள் இனத்திலும் பெண் பறவைகள்தான் கண்கவர் அழகுடன் காட்சியளிக்கின்றன.

அழிந்து வரக்கூடிய பிராணிகளின் பட்டியலில் எங்கள் இனமும் இருக்கிறது. ஆஸ்திரேலிய காடுகளில் என் உறவினர்கள் 1500 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள் என்றால் எங்களின் நிலையை நீங்களே புரிந்துகொள்ளுங்கள்!

வண்ணம்
தீட்டுங்கள்!



ஓவியப் போட்டி முடிவு



முதல் பரிசு:
டி. பிரபாகரன்,
பத்தாம் வகுப்பு, அருள்மிகு வள்ளலார் உ.நி.பள்ளி, வேல விநாயகர் குப்பம், கடலூர்

இரண்டாம் பரிசு:
தே. சுபா பிரியா,
அக்ஷயா அகாடமி மெட்ரிக் மே.நி.பள்ளி, பழனி




ஆகஸ்ட் இதழில் தாமரைக் குளம் என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். பரிசு பெற்ற தாமரைகள் இங்கே...

மூன்றாம் பரிசு:
அ. ஆன்டனேட் திவ்யா,
நாகர்கோவில்



தாமரைக் குளம்



ஆறுதல் பரிசு:
ஆ. தினேஷ், சிவானந்தா மே.நி.பள்ளி, பெரியநாயக்கன்பாளையம்



ஆறுதல் பரிசு:
செல்ஸாஸினி, டதி மே.நி.பள்ளி, நாகர்கோவில்

தகுதி என்ன?

கதை: ராஜலக்ஷ்மி
படம்: பிள்ளை



எல்லோரும் கை

தலைமை ஆசிரியர் தினமும் பள்ளியைச் சுற்றி வருவார். குறிப்பிட்ட ஒரு வகுப்பில் ஆசிரியர் கேள்வி கேட்கும்போது ஒருவர் கூட பாக்கி இல்லாமல் எல்லா மாணவர்களும் கையைத் தூக்கிப் பதில் சொல்லத் துடிப்பதை அவர் அடிக்கடி பார்க்க நேர்ந்தது.

அந்த வகுப்பு மாணவன் ஒருவனைத் தனியாகக் கூப்பிட்டு, "ஆசிரியர் கேள்வி கேட்கும்போது, மாணவர்கள் எல்லாரும் கை தூக்குகிறீர்கள். ஆசிரியர் கேள்வி கேட்டவுடன் பதில் வருகிறது. இந்த ஆசிரியர் நன்றாகப் பாடம் கற்றுத் தருகிறாரா?" என்று கேட்டார்.



"எங்கள் ஆசிரியர் ஒரு கட்டளை போட்டு இருக்கிறார். அதன்படி அவர் கேள்வி கேட்டால், நாங்கள் அனைவரும் கை தூக்க வேண்டும். ஆனால் பதில் தெரிந்தவன் வலது கை தூக்க வேண்டும். விடை தெரியாதவன் இடது கை தூக்க வேண்டும். ஆசிரியர் வலக் கை தூக்கியவனிடமே கேள்வி கேட்பார்" என்றான்!

- ம. சந்தோஷ், ஐந்தாம் வகுப்பு,
சிவகாசி அரிமா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, சிவகாசி

பாராட்டு!

நான் ஏழாம் வகுப்பிலும் என் அக்கா எட்டாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் இருவருக்கும் ஆசிரியை ஒருவரே. ஒருநாள் என் வீட்டுப் பாட நோட்டைப் பார்த்த ஆசிரியர் "இது உன் அக்கா எழுதிய பாடம்தானே?" என்றார். "இல்லை டீச்சர். நானே எழுதியது" என்று சொன்னேன். உடனே மற்றொரு மாணவியை அனுப்பி என் அக்காவின் ஆங்கில வீட்டுப்பாட நோட்டை எடுத்து வரச் சொன்னார். எங்கள் கையெழுத்து இரண்டும் ஒரே மாதிரி இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார். என் அக்கா "எங்கள் தாத்தா விடுமுறைகளில் எழுதச் சொல்வார். அதனால் எங்கள் இருவர் கையெழுத்தும் ஒரே மாதிரியாக அழகாக இருக்கிறது"





என்று சொன்ன உடன் எங்கள் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளிப் பாராட்டினார் ஆசிரியர்.

- ஆர். கலைச்செல்வி,
ஏழாம் வகுப்பு, லாமெக்
மேல்நிலைப் பள்ளி, சென்னை

தூக்குவது ஏன்?


ஷார்ப்பா இருக்கா?

நான் அறிவியல் பாடம் அம்மாவிடம் படித்துக் கொண்டிருந்தபோது பென்சிலை வைத்து விளையாடிக்கொண்டே படித்துக் கொண்டிருந்தேன். படிக்க உட்காரும்போது எப்போதும் பென்சிலும் நோட்டும் கையில் வைத்திருக்க வேண்டும் என்று அம்மா சொல்வார். அப்போது அம்மா என்னிடம் ''எப்போதும் ஷார்ப்பாக வைத்திருக்க வேண்டும்'' என்றார். உடனே நான் கோபமாக ''பென்சில் எப்பவும் ஷார்ப்பாதாம்மா வைத்திருப்பேன்'' என்றேன். ஆனால் அம்மாவோ மிகவும் கூலாக ''நான் சொன்னது உன் மூளையை'' என்றார்!

- ஆர். ராஜசேகரன்,
நான்காம் வகுப்பு,
மான்போர்ட் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, அரியலூர்

தலைகீழாக...

எங்கள் வகுப்பில் ஆசிரியர் கோன் (Cone) பற்றி பாடம் நடத்தியபோது கரும்பலகையில் ''ஐஸ் கிரீம் கோன் போல கோன் இப்படித்தான் இருக்கும்'' என்று வரைந்து காட்டினார். ஒரு மாணவன் ''சார், கோன் தலைகீழாக இருக்கிறது.




ஐஸ்கிரீம் கொட்டிவிடப் போகிறது'' என்றான்!

- பிரியதர்ஷினி,
ஏழாம் வகுப்பு,
மான்போர்ட் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, அரியலூர்

அமைதிப்பட்டினம் பக்கத்தில் இருந்த ஒரு காட்டில் அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் வந்த நாள் முதல் அந்த ஊர் மக்கள் அமைதியை இழக்கலாயினர். காரணம் இது தான். தோன்றியபோதெல்லாம் அந்த அரக்கன் ஊருக்குள் நுழைவதும், ஊரில் உள்ள ஆடு, மாடு முதலியவற்றையோ, மனிதர்களையோ எடுத்துச் சென்று உண்ணுவதுமாக இருந்தான்.

அந்த ஊரில் துறவி ஒருவர் இருந்தார். அவரிடம் ஊர் மக்கள் தங்கள் குறையைச் சொல்லி வருந்தவும் உடனே தான் உதவி செய்வதாக வாக்களித்தார் துறவி. அடுத்த முறை அந்த அரக்கன் யாரை யாவது பிடிக்க வந்தால் உடனே தன்னிடம் அனுப்புமாறு கூறினார்.

துறவி எப்படியும் தங்களைக் காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கையுடன் ஊர் மக்கள்



துறவியாக

மாறிய அரக்கன்!

கே.மாதங்கி

வீடு திரும்பினர்.

ஓரிரண்டு நாட்களில் அந்த அரக்கன் மாயன் அதுதான் அவன் பெயர், ஆடு, மாடுகள் சிலவற்றைப் பிடிக்க, அவர்கள் துறவியின் வேண்டுகோள்படி அவனை அவரிடம் செல்லுமாறு வேண்டினர்.

மாயன் எப்படியும் நமக்கு உணவு இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் துறவி இருக்கும் வனத்திற்குப் போனான்.

அவனைக் கண்டுகொண்ட துறவி ''வா நண்பனே, உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று அன்புடன் கூறினார்.

தன்னைப் பார்த்தவர்கள் அஞ்சுவதையும் நடுங்குவதையும் கண்டு பழகிய மாயனுக்குத் துறவி தனது ஆசிரம வாயிலில் அமர்ந்தவாறு எந்தப் பதட்டமுமின்றி பேசியது வியப்பைத் தந்தது.

''எனக்கு வரவேற்பா! நான்



உங்களை இங்கேயே தின்று விடப் போகிறேன்'' என்று மாயன் ஆர்ப்பரித்தான்.

''தாராளமாக நீ என்னைத் தின்னலாம்; அது ஒன்றுதான் உன்னால் முடியும்; இன்னொன்று உன்னால் முடியாதே'' என்றார் புன்னகையுடன்.

''இப்போதே அதை என்னிடம் சொல்ல வேண்டும், இல்லாவிட்டால் உங்களை இங்கேயே நசுக்கி விடுவேன், என் பலம் உங்களுக்குத் தெரியாது.''

''அப்படியா! சரி உன் பலத்தையும்தான் பார்க்கிறேன்; நீ ஒரு நாள் என்னைப் போன்ற துறவியாக இருந்து பார்; அதற்குண்டான மனவலிமை உனக்கு உள்ளதா?''

''பூ இவ்வளவுதானே, நாளை முழுவதும் நான் துறவியாக இருக்கிறேன்.''

''சரி, இன்றிரவு நீ இங்கேயே படுத்துக் கொள்; நாளை காலை நான் உன்னைத் துயில் எழுப்புகிறேன். நான் செய்யும் எல்லாக் காரியங்களையும் பார்த்துக் கொண்டு அப்படியே செய்ய வேண்டும். எந்தச் சிறு செயலையும் முடியவில்லை என்று சொல்லக் கூடாது, புரிந்ததா? ஊர் மக்கள் யாராவது வரும் நேரத்தில் மட்டும் திரை மறைவில் நீ இருந்து கொள்.''

ஒத்துக் கொண்டான் மாயன்.


மறுநாள் அதிகாலை துறவி மாயனை எழுப்பினார். அதுவரை ஒருநாள் காலை கூட எழுந்து பழகியிராத மாயன் தூக்கக் கலக்கத்துடன், அவர் பின் சென்றான்.

துறவி காலையில் யோகப் பயிற்சி செய்தார்; தூய ஆற்று நீரை அருந்தினார்.

இரவு முதல் நண்பகல் வரை தூங்கி, விழித்தெழுந்ததும் இரையைத் தேடி உண்டுவிட்டு மீண்டும் உறங்கச் செல்லும் அரக்கனுக்கு துறவியின் செயல்கள் வியப்பைத் தந்தன. அவனால் ஒரு சிறு உடற்பயிற்சி கூட செய்ய முடியவில்லை. கழுத்து, இடுப்பு என்று சுளுக்கிக் கொண்டு விட்டது.

நதி நீரில் துறவி தன்னை குளிக்கச் சொன்னபோது அரக்கனுக்கு அழுகையே வந்து

யார் இந்தப் பிரபலம்?



பாரத ரத்னா விருது பெற்றவர்.

விட்டது. 'இந்தப் பொல்லாத துறவி உணவைப் பற்றி இன்னும் ஏதும் சொல்லவில்லையே. சரி, எப்படியும் நாளை இந்தத் துறவியைத் தின்று விடுவோம். தேவைப் பட்டால் கூட ஓரிரு மனிதர்களைத் தின்று விடலாம்' என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

எல்லாம் முடிந்த பின், ஆசிரமத்துள் சென்ற துறவி மாயனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்து அவன் கைகளில் கனிகளைக் கொடுத்தார்.

''உணவு வேளை துவங்கி விட்டது மகனே; இனி பசியாறுவோம்.''

''உணவு உண்ட பின் இந்தப் பழங்களைச் சாப்பிட்டுக் கொள்கிறேன்.''

''என் உணவே இதுதான் மகனே.''

அரக்கனுக்கு மயக்கமே வந்து விட்டது! என்ன செய்வது? நாளை இந்தத் துறவியைத் தின்று பின் சில மனிதர்கள், ஆடு, மாடுகளையும் ஒரு கை பார்க்க வேண்டியதுதான்.

அந்தப் பழங்கள் அரக்கனுக்குப் போதவில்லை.

சிறிது நேரத்தில் ஆசிரம வாயிலில் ஊர்மக்கள் சிலர் துறவியைப் பார்ப்பதற்கும் அவரிடம் ஆலோசனை பெறுவதற்கும் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்.

''மனிதர்களிடம் மட்டுமா இவருக்கு அன்பு, பறவைகள், விலங்குகளிடம் கூட என்ன



" 'கஞ்சன்'கிற தலைப்புல கட்டுரை எழுதச் சொன்னேனே, ஏண்டா எழுதலை?"

"இங்க் வேஸ்ட் ஆயிடுமே சார்!"

- மு.ராஜேந்திரன்

கரிசனம்! எந்த ஓர் உயிரையும் கூட இளப்பமாக எண்ண மாட்டார்."

திரைமறைவில் நின்று மக்கள் பேசுவதைக் கேட்ட மாயனுக்கு துறவியின் மேன்மையும் மக்களின் பேச்சுகளும் மனதில் தைத்தன.

துறவி அமைதியுடன் ''உன் நேரம் முடிய இன்னும் ஒரு நாழிகை இருக்கிறது மகனே'' என்றார் அதே புன்னகையுடன்.

''ஆம் சுவாமி! அதற்குள் என்னை மனித உருவிற்கு மாற்றிவிடுங்கள்; நான் உங்களைப் போல் துறவியாகி விடுகிறேன்'' என்றான் மாயன்.

துறவி அந்த ஒரு நாழிகை நேரம் முடியக் காத்திருந்து விட்டு பின் மாயனை மனித உருவாக்கினார்.



● ஆர். ரமேஷ், திருச்சி

? ஜக்கு, உன் வயது என்ன?

என் படத்தைத்தான் பார்க்கறீங்களே, நீங்களே வயதையும் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! (சரியான வயதைக் கண்டுபிடித்தால் பரிசு!)

● கே. மல்லிகா, ராசிபுரம்

? ஆழ்கடலில் அலைகள் உண்டா ஜக்கு?

ஆழ்கடல் பகுதியில் அலைகள் கிடையாது மல்லிகா. ஆழ்கடலில் ஒளிகூட புகுவதில்லை. நீர் சலனமற்று காணப்படும். ஆனால் எரிமலைகளின் சீற்றம், பூகம்பம் ஆகிய நேரங்களில்



● நிலாவில் இருந்து பார்க்கும்போது பூமியும் ஒளிரும்.



● வி.என்.சேகர் வத்தலக்குண்டு

? குரங்கு பெடல் போட்டு சைக்கிள் ஓட்டியது உண்டா ஜக்கு?

இந்தக் கேள்வியை ஏன் கேட்டிருக்கீங்கன்னு புரிஞ்சிடுச்சு சேகர். நான் குரங்கு பெடல் போடாமலேயே சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டேன்.

ஆழ்கடலில் அலைகள் உண்டாகலாம். கடல் வாழ் உயிரினங்கள் இடம் பெயர்வதால் ஆழ்கடல் பகுதியில் கடல் அலை தோன்ற வாய்ப்பில்லை.

● ஆர். அம்பிகா, மதுரை

? நாம் அடுத்தவர்களிடம் அன்பு காட்டிப் பழகினால், நம்மை ஏமாளி என்று நினைக்கிறார்களே, என்ன செய்வது ஜக்கு?


நாம் அன்பு காட்டுகிறவர்கள் அனைவருமே நம்மை ஏமாளி என்று நினைப்பதில்லை. எத்தனையோ பேரிடம் அன்பு காட்டுகிறோம். அதில் ஒரு சிலர் தான் இப்படி நினைப்பார்கள். அதற்காக நாம் அன்பு காட்டாமல் இருக்க முடியுமா? மனிதனின் அடிப்படை நல்ல குணமே அடுத்தவர்களிடம் அன்பு காட்டுவதுதான். உங்கள் அன்பை யாராவது தவறாக பயன்படுத்த

ஆழ்கடலில் அலைகள் உண்டா?





யார் இந்தப் பிரபலம்?



1971ல் மக்ஸஸே விருது பெற்றவர்.

நினைத்தால் அவர்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். எந்த ஒரு விஷயத்திலும் இது போன்ற சில பிரச்னைகள் வரத்தான் செய்யும். அதற்காக நாம் எல்லாவற்றையும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது அம்பிகா!

● **பி. நாராயணன்,**
செங்கல்பட்டு

? நிலா தானாகவே ஒளிர்கிறதா ஜக்கு?

சூரியன் மட்டுமே தானாக ஒளிரக்கூடியது. மற்ற கோள்கள், துணைக் கோள்கள் எல்லாம் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று பிரதிபலிக்கின்றன. நிலாவில் நின்று பார்த்தால் பூமியும் ஒளிரும் நாராயணன்!

● **என்.எஸ். பூர்ணிமாதேவி,**
ராஜபாளையம்

? எந்த வேலையைச் செய்யவும் எனக்கு ரொம்பத் தயக்கமாக இருக்கிறது. என்ன செய்யலாம் ஜக்கு?


நம் முன்னேற்றத்தின் முதல் எதிரி தயக்கம்தான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் பூர்ணிமா. அத்துடன் 'எதையும் என்னால் செய்ய முடியும்' என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். இவை இரண்டையும் செய்த பிறகு உங்களுக்கே மாற்றம் தெரியும்.

● **எம். விக்னேஷ்,**
பாளையங்கோட்டை.

? ஜக்கு, எனக்கு குளிர் பானங்கள் என்றால் விருப்பம் அதிகம். நான் வாங்கிக் குடிக்கும்போது என் அப்பா திட்டுகிறார். இது ஒரு தவறா? என் அப்பாவுக்குப் புரிய வைப்பது எப்படி?

புரிய வைக்க வேண்டியது உங்களுக்குத்தான் விக்னேஷ். பாட்டிலில் விற்கப்படும் குளிர் பானங்களை அடிக்கடி குடித்தால் பற்களைப் பாதிக்கும்; உடலுக்கும் கேடு விளைவிக்கும். அப்பா உங்களைக் கண்டிப்பது இந்தக் காரணத்தினால்தான். நமது நலனில் அக்கறை காட்டுபவர்கள் அப்பா, அம்மாவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? ஆசைக்கு எப்பொழுதோ சாப்பிடுவதில் தவறில்லை. அதை வழக்கமாக்கிக் கொள்வதுதான் தவறு, சரியா விக்னேஷ்?

கிரிக்கெட் க்விஸ்



1. எந்த இந்திய கிரிக்கெட் வீரர் தொடர்ச்சியாக 'டெஸ்ட்' போட்டிகளில் அதிக பட்சம், ரன் ஏதும் எடுக்காமல் ('டக்') ஆட்டம் இழந்தார்?

2. ஒரே 'டெஸ்டி'ல் எந்த இரண்டு நாட்டு விக்கெட் கீப்பர்களும் சதம் அடித்தனர்?

3. 'டெஸ்ட்' போட்டிகளில் எந்த இந்திய கிரிக்கெட் விளையாட்டு வீரர் எல்லா இடங்களிலும் அதாவது முதல் வீரர் முதல் 11வது வீரர் வரை விளையாடியிருக்கிறார்.

4. எந்த நாட்டு கிரிக்கெட் வீரர் 'டெஸ்ட்' போட்டியில் 'ஸ்கூட்டர் ஹெல்மெட்' போட்டுக் கொண்டு விளையாடினார்?

5. ஒரே நாளில் ஒரு 'டெஸ்ட்' போட்டியின் 4 இன்னிங்ஸ்களும் பகுதியாக விளையாடப்பட்ட போட்டி எது?

6. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் எந்த இந்திய கிரிக்கெட் விளையாட்டு வீரர் அதிகமான போட்டிகளில் விளையாடியுள்ளார்?

7. சச்சின் டெண்டுல்கரின் பிறந்த தேதி என்ன?

8. எந்த வருடத்திலிருந்து கிரிக்கெட் 'ஒலிம்பிக்' விளையாட்டுகளில் விளையாடப்படுவதில்லை?

9. ஒரே 'டெஸ்ட்' போட்டியில் 10 விக்கெட்டுகளையும் வீழ்த்திய இந்திய கிரிக்கெட் வீரர் யார்? எந்தப் போட்டியில்?

10. முடிவுராமல் நிறுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் முடிவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

- டி.ஆர். நடராஜன், சென்னை

விடை 79 ஆம் பக்கம்

துப்பறியும் துஷ்யந்த்!


2

கதை: மாயூரன்


படம்: ராம்கி








நான் தயார்.
நான் சரியாகப் பதில் சொன்னால் எனக்கும் பரிசு தரணும்.
ஓ.கே!


வினோத் கேக் வெட்டியபோது நேரம் என்ன?
ஏழு மணி இருக்கும்!
தெரியலை.
கேக் வைத்திருந்த மேஜை விரிப்பின் நிறம் என்ன?
மேஜை மீது விரிப்பு இருந்ததா என்ன?


நான் உள்ளே வரலாமா என்று கேட்டவரின் பெயர்?
பீட்டரா?
இல்லை ஜான்சன்!
இரண்டுமில்லை மைக்கேல். அவரிடம் தெரிந்த வித்தியாசம் என்ன?
தொப்பி போட்டுக் கொண்டிருந்தார், சரியா?
அது மட்டுமில்லை. வலது கையில் கடிகாரம் கட்டியிருந்தார். மொத்தம் எத்தனை பேர் அங்கே கூடியிருந்தார்கள் தெரியுமா?
ஐம்பது பேர் இருப்பார்களா?
அவ்வளவு பேர் இருக்காது. முப்பது பேர் இருக்கலாம்.



இதுதான் கூர்ந்து நோக்கும் பயிற்சி. போனோம், வந்தோம் என்று இருக்கக் கூடாது...
...எங்கே போனாலும் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்கிற விழிப்புணர்ச்சி அவசியம்.
நாங்க இதையெல்லாம் கவனிக்கலையே!
சுருக்கமாகச் சொன்னால் கண்ணும் காதும் கூர்மையாக இருக்கணும் இல்லையா?
ஆமாம்!
எனக்கு இது சவால். புது மனிதனாக மாறிக் காட்டறேன்.
அப்போது அழைப்பு மணி ஒலித்தது.
டர்ர்ர்ர்
(தொடரும்)

விடுகதைப் பக்கம்

கமண்டலத்தில் பன்னீர்!

I. 1. கைக்கு எட்டாத உயரத்தில் கமண்டலத்தில் பன்னீர் - அது என்ன?

2. பச்சை சேலையில் சமையலுக்கு வருவாள், மஞ்சள் சேலையில் பூஜைக்கு வருவாள் - அவள் யார்?

3. ஆச்சி வீட்டுத் தோட்டத்தில் ஆளுக்கொரு ஊஞ்சல் - அது என்ன?

- எஸ். கவிதா, திருநெல்வேலி

II. 1. நாள் முழுக்க நடையாய் நடந்தாலும் எட்டும் தூரம்கூட எட்டிப் போக முடியலை - அது என்ன?

2. அட்டைக்கரி பெண்ணுக்கு உச்சந்தலை மஞ்சள் - அவள் யார்?



3. தேவையில்லாமல் வெளியே எட்டிப்பார்க்க மாட்டாள். உள்ளிருந்தே இயங்குவாள். என்றாலும் தன்னிடத்தில் தண்ணீரைச் சேர்த்துக் கொள்வதில்லை - அவள் யார்?

- ச.அழகுவேல், கன்னிவாடி

III. 1. குடிக்கத் தண்ணீர் உண்டு; குளிக்கத் தண்ணீர் இல்லை - அது என்ன?

2. எலும்பில்லாத மனிதன் ஊரெல்லாம் சுற்றுவான் - அவன் யார்?

3. பரட்டைத் தலை மாமிக்கு தங்கம் போல் மருமகள் - அது என்ன?

- பு.யூனுஸ் சாரிக், மதுரை

IV. 1. சன்னமான கதவுகள், திறந்து மூடும்போது சத்தம் வராத கதவுகள் - அது என்ன?

2. வெப்பத்துக்கு உருகியவன் வீடு முழுக்க வாசனையானான் - அவன் யார்?

3.எல்லோரும் விரும்பும் பால் எவரும் குடிக்காத பால் - அது என்ன பால்?

- பா. விஜயசாரதி,திருப்பதி

விடைகள்:

I: 1. இளநீர் 2. வாழைக் காய், பழம் 3. ஆல விழுதுகள்

II: 1. நத்தை 2. பனம்பழம் 3. நாக்கு

III: 1. தேங்காய் 2. புகை 3. சோளக்கதிர்

IV: 1. கண் இமைகள் 2. நெய் 3. தபால்

நெட்பிட்ஸ்

■ மைக்கேல் ஜாக்சன் தன் முகத்துக்கு ஏற்ற மூக்கு, கண், வாயைத் தேர்ந்தெடுக்கிறார்...





■ சின்னக் குழந்தைக்குச் சின்ன நாற்காலி!



■ கால்களில் என்ன வித்தியாசம்? தலா ஆறு விரல்கள்!

ரகசிய என் தெரியும்!

'**வா**ய்விட்டுச் சிரிச்சா நோய் விட்டுப் போகும்' என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். அது விஞ்ஞான பூர்வமாக நிரூபணமான விஷயம் என்பது உங்களுக்குத் தெரியுமா? அண்மையில் பிரிட்டிஷ் மருத்துவ இதழ் ஒன்றில் சிரிப்பதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவு வெளியிடப்பட்டது.

நார்மன் கசின்ஸ் என்கிற நோயாளியை டாக்டர்கள் 'தேறாத கேஸ்' என்று கை

விரித்துவிட்டார்கள். அவர் 'சாகத்தான் போகிறோம்; அது வரை வாய்விட்டு நிறைய சிரித்து விடலாமே' என்று வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் படங்களை, டீ.வியில் போட்டுப் பார்க்க ஆரம்பித்தார். இப்படியே சில வாரங்கள் ஓடியது. மனுஷர், நோய் மறைந்து குண மடைந்து விட்டார். நல்ல



சிரிப்பு, மனிதனுக்குள் பாசிடிவ் வான எண்ணங்களை உருவாக்குகிறது; வயிறு குலுங்க, வாய் விட்டுச் சிரித்தால், ரத்த ஓட்டம் அபிவிருத்தி அடையும்; ஜீரண சக்தி அதிகரிக்கும்; மன இறுக்கம் தளரும்; உடம்பில் நோய் எதிர்ப்பு சக்திகூட அதி கரிக்கும். இவற்றோடு போன ஸாக தன்னம்பிக்கை அதிகரிக் கும் என தெரிய வந்துள்ளது.

மிஸ்டர் எக்ஸ் எப்படிப்பட்ட அறிவாளி என்று உங்களுக்குத் தெரியுமில்லையா? அவர் ஒரு பாங்க்கின் ஏ.டி.எம் என்று சொல்லப்படும் தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரத்துக்குப் போனார். தன்னிடமிருக்கும் ஏ.டி.எம் இயந்திரத்துக்குரிய அட்டையை எடுத்து, மெஷினில் அதற்குரிய இடத்தில் பொருத்தி தேய்த்தார்.

அவரது கணக்குக்குரிய ரகசியக் குறியீட்டு எண்களின் பொத்தான்களை அழுத்தினார். அந்த எண்கள் ரகசியமானவை என்பதால், சரியான எண்களை அழுத்தினாலும் திரையில் **** என்றுதான் தெரியும்.

இதைக் கவனித்தார் பக் கத்திலிருந்த ஒருவர். அவர் மிஸ்டர் எக்ஸைக் கிண்டல் பண்ண வேண்டும் என்று, "உங் களுடைய ரகசிய குறியீட்டு எண் எனக்குத் தெரியுமே! ****தானே?" என்று கேட் டதும், அதிபுத்திசாலியான மிஸ்டர் எக்ஸ், "என் ரகசியக் குறியீட்டு எண் 4578" என் றாரே பார்க்கலாம்!

வேலை தேடிக் கொண் டிருந்த மிஸ்டர். எக்ஸ், ஒரு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டார்.

கேள்வி: உங்கள் பிறந்த தேதி?

மிஸ்டர் எக்ஸ்: ஆகஸ்ட் 4.

கேள்வி: எந்த வருடம்?

மிஸ்டர் எக்ஸ்: ஒவ்வொரு வருடமும்தான்!

காகம் புத்திசாலியான பறவை என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு தகவலை இன்டர்நெட்டில் பார்த்தேன். ஜப்பானில் காக்கைகள், கொட்டைகளை அலகில் கவ்விக்கொண்டு, போக்குவரத்து சந்திப்புகளுக்கு வருகின்றன. அலகில் இருக்கும் கொட்டையை, சாலையில் போட்டுவிட்டுக் காத்திருக்கின்றன. சில நிமிடங்களில், வாகனங்கள் ஏறி, கொட்டைகள் உடைய, அதனுள்ளே இருக்கும் பருப்புகளை எடுத்துக் கொண்டு பறந்து போய்விடுகின்றன!




சில சுவாரசியமான தகவல்களைப் பார்க்கலாமா?

- பிரபல ஓவியர் லியனார்டோ டாவின்சிக்கு ஓர் அரிய திறமை இருந்தது. ஒரு கையால் எழுதிக்கொண்டே இன்னொரு கையால் ஓவியம் தீட்ட அவரால் முடியும்.

- உலகிலேயே மிக அதிக அளவில் டீ குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஐரிஷ் நாட்டுக்காரர்கள்தான்.

- 18ம் நூற்றாண்டில் குத்துச் சண்டை வீரர்கள் பலரும் குத்துச்சண்டையில் பங்கேற்று, வாயில் அடிபட்டு, பல் உடைவது நிகழ்ந்துகொண்டிருந்தது. 1902ல் லண்டனைச் சேர்ந்த பல் மருத்துவரான ஜாக் மார்க், பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்க ஒரு பாதுகாப்பு உபகரணத்தைக் கண்டுபிடித்தார். அதன்பின் பற்கள் காப்பாற்றப் படுகின்றன.

* டாவின்சி



- 1878ல், லண்டனில் முதன் முதலாக டெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது, லண்டன் நகரம் மொத்தமாக, பத்தே பேர்தான் டெலிபோன் இணைப்புக்கு விண்ணப்பித்தனர்.

தொகுப்பு:
சந்திரமௌலி

‘சந்தோஷ்பூர்’ ராஜா, ராணியில் தொடங்கி எல்லோரும் எப்போதும் சந்தோஷமாகவே இருந்தார்கள்.

சந்தோஷ்பூருக்கு அருகே, சோகப்பூர் என்று இன்னொரு நாடு. அந்த நாட்டின் அரசன் சரியான முசுடு. அவனுக்குச் சிரிப்பு என்றாலே வெறுப்பு. நாட்டில் யார் சிரித்தாலும் உடனடியாக அவர்களுடைய தலையைச் சீவி விட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தான். ஆகவே, அவனுடைய நாட்டு மக்களெல்லாம் எந்நேரமும் அழுது, கண்ணீர் வடித்தபடியிருந்தார்கள்.

ஒரு நாள், சந்தோஷ்பூரின் உற்சாகமான சூழ்நிலையைப் பார்த்து வந்த யாரோ, சோகப்பூர் ராஜாவிடம் அது பற்றிச் சொன்னார்கள். இதைக் கேட்டதும் அவனுக்குப் பயங்கர கோபம். உடனடியாக சந்தோஷ்பூர் மீது படையெடுத்தான்.

ஆக்ரோஷமான அந்தப் போரில், சந்தோஷ்பூர் தோற்றுவிட்டது. சந்தோஷ்பூர் ராஜாவைக் கொன்ற சோகப்பூர் ராஜா, ராணியையும் அவளுடைய மகளையும் சிறை வைத்துவிட்டான்.

சோகப்பூர் ராஜாவின் திட்டம் இதுதான் - அழகான இந்தப் பெண் குழந்தை வளர்ந்த பிறகு அவளைத் தன்னுடைய மகனுக்

சுண்டெலி





உமாதரணி

சிநேகிதன்!

குத் திருமணம் செய்து வைத்து விடலாம்.

இந்த விஷயம் கேள்விப்பட்டதும் சந்தோஷ்பூர் ராணி அலறித் துடித்தாள்.

ராணியின் எண்ணத்தைத் தெரிந்து கொண்ட சோகப்பூர் ராஜா, அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்காக, அவர்கள் இருவரையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான். தினந்தோறும் சாப்பிடுவதற்கு மூன்றே மூன்று பட்டாணிகள்தான் உணவு!

அப்போது ராணியின் அறைப் பக்கமாக ஒரு சிறிய சுண்டெலி வந்தது. அதைப் பார்த்த ராணி, தன் சோகத்தையும் மறந்து சிரித்து விட்டாள்.

ஏதேனும் சாப்பிடக் கிடைக்குமா என்று அது அலைந்து தேடிக் கொண்டிருந்தது.

"சுண்டெலி சிநேகிதனே, நீ வேறு எங்காவது போய் உணவு தேடு!" என்று கரகரத்த குரலில் சொன்னாள் ராணி.

ராணி இப்படி சொல்லியும் அந்தச் சுண்டெலி கேட்கவில்லை. திடீரென்று அட்டகாசமாக நடனம் ஆட ஆரம்பித்து விட்டது.

அதைப் பார்த்த ராணிக்கு ஒரே ஆச்சரியம்!

இப்படி சிறிது நேரம் உற்சாகமாக நடனமாடியபின், அவளைப் பார்த்து மீண்டும் சிரித்தது சுண்டெலி. உடனே தன்னிடமிருந்த மூன்று பட்டாணிகளில் ஒன்றை அதற்குக் கொடுத்தாள் ராணி. ''உன்னுடைய நடனத்திற்கு இதைவிடப் பிரமாதமாக பரிசு தரவேண்டும். ஆனால் இப்போதைக்கு என்னிடம் இருப்பது இதுதான்!''

சுண்டெலி அந்தப் பட்டாணியை சந்தோஷமாக வாங்கிச் சாப்பிட்டது.

அடுத்த விநாடி ராணியின் அறையிலிருந்த மேஜை மீது அருமையான பல உணவுகள் தோன்றின.

ராணிக்கு பயங்கர ஆச்சரியம்! அற்புதமான அந்தச் சாப்பாட்டைத் தன் குழந்தைக்கு ஊட்டி, தானும் நன்கு சாப்பிட்டுப் பசியாறினாள் ராணி.

அதன் பிறகு தினந்தோறும் அந்த எலி வந்தது, வேடிக்கையாக நடனமாடி, கைதட்டல்களையும் ராணியின் மூன்று பட்டாணிகளையும் பெற்றுக்கொண்டது. அடுத்த விநாடி, ராணிக்கும் இளவரசிக்கும் அருமையான அறுசுவை விருந்து கிடைத்தது.

இப்படியாக ராணியின் ஒரு கவலை தீர்ந்தது. ஆனாலும் இன்னொரு கவலை அவளை விடாமல் துரத்திக் கொண்டிருந்தது. 'இந்தக் குழந்தை வளர்ந்து பெரியவளானதும், அந்த இளவரசனிடம் மாட்டிக் கொண்டு கஷ்டப்பட வேண்டுமே.'


இதை எண்ணி வருந்திய ராணிக்கு, ஒரு நல்ல யோசனை தோன்றியது. சிறிய மூங்கில் கூடை ஒன்றைச் செய்து, அதில் தன் குழந்தையை வைத்து தான் சிறைப்பட்டிருக்கும் அறையிலிருந்து வெளியே விட்டுவிட்டால், அந்த வழியாகச் செல்கிற நல்ல மனம் கொண்டவர்கள் யாரேனும் அவளை எடுத்து வளர்த்து ஆளாக்குவார்கள் என்று முடிவு செய்தாள்.

யாரேனும் தென்படுகிறார்களா என்று ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள் ராணி.

அப்போது, அந்த வழியே ஒரு வயதான பாட்டி வந்தார். அவரிடம் ராணி விஷயத்தைச் சொன்னதும், 'கவலைப்படாதே, உன் மகளை மகாராணி போல் வளர்ப்பது என் பொறுப்பு' என்று உறுதி சொன்னார் பாட்டி.

''உங்கள் உதவிக்கு நான்

யார் இந்தப் பிரபலம்?



பல பல்கலைக் கழகங்கள் (வெளிநாட்டில் உட்பட) இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்துள்ளன.

எப்படி கைமாறு செய்யப் போகிறேன்?'' என்று தழுதழுத்தாள் ராணி.

''எனக்குச் சுண்டெலிகளைச் சாப்பிடுவதென்றால் ரொம்ப விருப்பம். ஆகவே எனக்கு ஒரு சுண்டெலியைப் பிடித்துக் கொடு'' என்று அந்தப் பாட்டி சொல்லவும், ராணிக்கு பலத்த அதிர்ச்சி.

''ஏன் அப்படி திகைக்கிறாய்? இங்கு சுண்டெலியே இல்லையா?''

''இருக்கிறது. ஆனால்...'' என்று இழுத்தாள் ராணி.

''என்ன ஆனால்?'' பாட்டியின் குரலில் இப்போது எரிச்சல்.

'ம்ஹூம். முடியாது' என்று தலையசைத்து மறுத்தாள் ராணி.

''இந்தச் சுண்டெலி என் பிரியத்துக்குரிய தோழன். அபூர்வமான சக்தி கொண்டது. மிகவும் அன்பானது!''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் குழந்தையை நான் வளர்க்க வேண்டுமானால், நீ எனக்கு அந்தச் சுண்டெலியைப் பிடித்துத் தந்தாக வேண்டும்'' என்று கறாராகப் பேசினார் பாட்டி.

''உன் மகளின் நலனைவிட, உனக்கு அந்தச் சுண்டெலிதான் முக்கியமா? யோசி.''

ராணி கொஞ்சமும் யோசிக்கவில்லை. ''என் சுண்டெலி சிநேகிதனின் அன்புக்கும் நட்புக்கும் என்னால் துரோகம் செய்ய முடியாது'' என்றாள் அழுகையுடன். ''நீ என் மகளை வளர்க்க மறுத்தாலும் பரவாயில்லை. அன்பான அந்தச் சுண்டெலியை நான் ஏமாற்றிக் கொல்ல மாட்டேன்.''



''தெரியாமல் காயினை முழுங்கிட்டேன்.''

''எத்தனை ரூபாய் காயின்...?''

''அதான். தெரியாமல் முழுங்கிட்டேனு சொன்னேனே!''

- ஆர். தங்கராஜ்

இப்படி ராணி சொன்னதும், சட்டென்று அங்கே ஒளிப் பிழம்பு தோன்றியது. சற்றுமுன் ராணியுடன் பேசிக்கொண்டிருந்த பாட்டி மறைந்து, அங்கே ஓர் அழகான தேவதை தோன்றியது.

''பயப்படாதே ராணி, உன் அன்பின் ஆழத்தைச் சோதிக்கதான் நான் இப்படி மாறுவேடத்தில் வந்தேன்!''

ராணிக்கு எதுவும் புரியவில்லை. ஆகவே தேவதை அவளுக்கு விஷயத்தை விளக்கிச் சொன்னது. ''சுண்டெலியாக வந்ததும் நான்தான். அந்தச் சுண்டெலியைத் தின்கிற பாட்டியாக வந்ததும் நான்தான். ஒரு சுண்டெலியின் மீது கொண்ட அன்பால், உன் மகளின் நல்ல எதிர்காலத்தைக் கூட துறக்கத் துணிந்து விட்டாய். நீ வாழ்க!''

இப்படி சொன்ன தேவதை, அடுத்த நிமிடம் ராணியையும் அவளது மகளையும் தன்னோடு தூக்கிக் கொண்டு பறந்தது.

'ஓடாமல்' கால்பந்து!


கால்பந்தாட்டத்தைப் போலவே, இந்த 'ஓடாத' விளையாட்டுக்கும் இரு அணிகள் தேவை. அணிக்கு ஒரு கேப்டனும் அவசியம். இரு அணிகளும் ஆளுக்கு ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு விளையாட வேண்டும்.

இப்படி இரு அணிகள் பிரிந்தபின், இருவரில் யார் முதலில் பந்தை உதைப்பது என்று தீர்மானிப்பதற்காக ஒரு நாணயத்தைச் சுண்டிப் பார்த்துக் கொள்ளலாம். அதன் பிறகு, கரும்பலகையிலோ அல்லது வெள்ளைத் தாளிலோ ஆட்டக் களத்தை வரைந்து கொள்ளலாம்.

இப்படி வரையப்படும் ஆட்டக்களம் கீழ்கண்டவாறு இருக்க வேண்டும்:

1. நிஜக் கால்பந்தாட்டத்தில் உள்ளது போலவே, களத்தின் இருபுறமும் கோல் போஸ்ட்களை (goal posts) முதலில் வரைந்து கொள்ளுங்கள்.

2. பின்னர், இந்த இரு கோல் போஸ்ட்களுக்கும் இடையே உள்ள பகுதியை, இருபது சம பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். இந்த இருபது பிரிவுகளையும் இருபத்தொரு புள்ளிகளின்மூலம் காண்பிக்கலாம்.



என்.சொக்கன்

விளையாட்டு

முதல் புள்ளி, இடது பக்க கோல் போஸ்டில் தொடங்கும். இருபத்தொன்றாவது புள்ளி, வலது பக்க கோல்போஸ்டில் முடிவடையும். காண்க:

{ • }

3. ஆட்டத்தின் பல்வேறு நிலைகளை வெளிப்படுத்தும் இந்த இருபத்தொரு புள்ளிகளுக்கும் பெயர், அல்லது வேறு ஏதேனும் ஓர் அடையாளம் கொடுக்க வேண்டும். உதாரணமாக நட்ட நடுவிலுள்ள புள்ளிக்கு '0' என்று எண் தரலாம். அதற்கு இடப்புறமுள்ள புள்ளிகளுக்கு 'a1' தொடங்கி 'a10' வரையும், வலப்புறமுள்ள புள்ளிகளுக்கு 'b1' தொடங்கி 'b10' வரையும் பெயர் தரலாம். காண்க:

{ • }
a10 a9 a8 a7 a6 a5 a4 a3 a2 a1 0 b1 b2 b3 b4 b5 b6 b7 b8 b9 b10



4. இப்போது நடுவிலுள்ள '0' என்ற புள்ளியில், கால்பந்தை வைக்கவும். அதாவது அந்த இடத்தில் ஒரு கால்பந்தை வரையலாம். அல்லது நிஜமான ஒரு பந்தைக்கூட வைக்கலாம். இதுதான் ஆட்டத்தின் தொடக்க நிலை. காண்க :






இப்போது ஆட்டம் தொடங்கும் நேரம்.

பூவா, தலையாவில் ஆட்டத்தைத் தொடங்குவதற்குத் தேர்வான அணியினர் சவாலுக்குத் தயாராக வேண்டும். எதிர் அணியிலிருந்து யாரேனும் அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கலாம். வழக்கம் போல இந்தக் கேள்வி பொது அறிவு சம்பந்தமானதாகவோ, பாடம் தொடர்பானதாகவோ, கணிதப் புதிராகவோகூட இருக்கலாம். ஆனால், சட்டென்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லுமளவு இருக்க வேண்டும்.

இந்தக் கேள்விக்கு முதல் அணியிலிருந்து யாரேனும் ஒருவர் பதில் சொன்னால் போதும். ஆனால் உரிய நேரத்துக்குள் (அறுபது விநாடிகள்) பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் வாய்ப்பு எதிரணிக்குச் சென்றுவிடும்.

அப்படியில்லாமல், முதல் அணி சரியாக பதில் சொல்லிவிட்டால் அவர்கள் பந்தைச் சரியாக உதைத்துவிட்டதாக அர்த்தம். ஆகவே, பந்து அவர்கள் அமர்ந்திருக்கிற திசைக்கு எதிர் திசையில் நகரும். அதாவது '0' என்ற நிலையிலிருந்து 'b1' என்ற நிலைக்கு நகரும். (முந்தைய பந்தை அழித்துவிட்டு, புதிய நிலையில் நடுவர் ஒரு பந்தை வரைவார்) காண்க:




இப்போது இரண்டாவது அணி, இன்னொரு கேள்வி கேட்கும். இதற்கும் முதல் அணி சரியாக பதில் சொல்லிவிட்டால் பந்து மறுபடி உதைக்கப்பட்டு 'b2'க்குச் செல்லும். தவறாக பதில் சொல்லிவிட்டால், பந்து நகராது. ஆனால், அடுத்த கேள்விக்கு பதில் சொல்லும் வாய்ப்பு இரண்டாவது அணிக்குச் சென்று விடும்.

ஆகவே, இப்போது முதலாவது அணியினர் ஒரு கேள்வி கேட்க

வேண்டும். இதற்கு எதிரணி சரியாக பதில் சொல்லிவிட்டால், அவர்கள் தங்கள் திசையில் வந்த பந்தை உதைத்து, எதிர்ப்பக்கம் தள்ளி விட்டதாக அர்த்தம். ஆகவே, பந்து 'b2'விலிருந்து எதிரணியின் திசை யில் நகரும். அதாவது பழையபடி பந்து 'b1'க்குச் சென்றுவிடும்.

அதன்பிறகு, அவர்கள் சரியாக பதில் சொல்லச் சொல்ல, பந்து எதிரணியின் திசையில் ('b1'லிருந்து '0'. அங்கிருந்து 'a1' என்று) நகரும். காண்க:



இப்படியே, இரு அணிகளும் மாற்றி மாற்றி, பந்தை உதைத்து எதிரணியின் கோல் போஸ்டை நெருங்க வேண்டும். இதுதான் போட்டி.

பந்து 'b10'க்கு நகர்ந்துவிட்டால், முதல் அணிக்கு ஒரு கோல். அதற்கு அனுமதிக்காமல் எதிர்திசையில் பந்தை உதைக்கும் இரண்டாவது அணியினர். பந்தை 'a10'க்கு நகர்த்தினால், அவர்களுக்கு ஒரு கோல். காண்க :






ஒரு மணி நேரத்துக்குள் எந்த அணி அதிக கோல்கள் அடிக்கிறதோ, அவர்களை வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கலாம்.

ஒருவேளை, இரு அணிகளும் சம மதிப்பெண்கள் எடுத்திருந்தால், வெற்றி தோல்வி இல்லாத 'டை' நிலை வந்துவிடும். இப்போது 'டை பிரேக்கர்' என்ற பெயரில் இரு அணிகளும் எதிரணியைச் சில கடினமான கேள்விகள் கேட்கலாம். இப்படி அதிக கேள்விகளுக்குப் பதில் சொல்லும் அணி வெற்றி பெறும்.

ஏட்டுப் பந்தை அறிவுப்பூர்வமாக உதைத்து விளையாடுங்கள்!



ராஜ விசுவாசம்!



சாங்லி என்ற அரசர் சீனாவை ஆட்சி செய்து வந்தார். ஒரு நாள் -
ஐயோ!
வா, அரசருக்கு உதவலாம்!




ஆ! என்னால் நடக்க முடியவில்லை. அரண்மனைக்குத் தூக்கிச் செல்லுங்கள்.
உத்தரவு அரசே!
© JINGLE BELL CREATIONS
இந்தச் செய்தி ராணுவ தலைமை அதிகாரி ஷெல்லாங்குக்குச் சென்றது.
என்ன சொல்றீங்க, உண்மையா?
ஆமாம்.




அரசரைக் காண வந்தார் ஷெல்லாங். அப்போது -
உஷ்... மெதுவாகப் பேசு.
யார் ரகசியமாகப் பேசுவது?
ஓ! அரண்மனை வைத்தியரும் மந்திரியும்தானா!
மந்திரி ஒரு பைநிறைய தங்க நாணயங்களை வைத்தியரிடம் வழங்கினான்.
இவர்கள் ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள்!
பிறகு மருத்துவர் அரசரைக் கண்டு காலைப் பரிசோதித்தார்.
கவலைப்படாதீர்கள் அரசே! நான் விரைவில் குணமாக்கும் மருத்துவ எண்ணெய்யைத் தடவறேன்.


பூரணமாக குணமடைந்து விடுவீர்கள்.
ஐயோ! வலி தாங்க முடியலை.
நாளைக்கு வந்து முறையாக வைத்தியத்தை ஆரம்பிக்கிறேன்.
மறுநாள், மருத்துவர் அரசரைக் காண, எண்ணெய்யுடன் வந்தார்...
ஐயோ...ஆ!
பாட்டில் உடைந்து எண்ணெய் பரவ, மருத்துவர் வழுக்கி விழுந்தார்.
வலி உயிர் போகுதே!
அப்போது ஷெல்லாங் வந்தார்.
ஐயோ என் கால் போச்சே!
கவலைப் படாதீங்க மருத்துவரே! அதே எண்ணெய்யை உங்களுக்கும் தடவறேன்.
வாங்க, நான் உதவறேன்!


அந்த எண்ணெய் எனக்கு வேண்டாம்!
ஏன், என்ன?
ஷெல்லாங் கோபம் அடைந்தார்.
உண்மையை உடனே சொல்லு. இல்லாவிட்டால் கொன்று விடுவேன்.
நான்தான் உண்மையைக் கண்டுபிடிக்க தரையில் எண்ணெய் ஊற்றினேன். சொல்..!
என்னை மன்னித்து விடுங்கள். எல்லாவற்றுக்கும் காரணம் மந்திரிதான்!
மருத்துவர் உண்மையைச் சொல்ல ஆரம்பித்தார்.
அந்த எண்ணெய் எதற்கும் பயன்படாது. அரசரால் வாழ்க்கை முழுவதும் நடக்க முடியாது.
ஓ! பிறகு ஆட்சி தானாகவே மந்திரி கைக்குச் சென்று விடும்!
மருத்துவரையும், மந்திரியையும் அரசர் முன்னால் நிறுத்தி நடந்ததைக் கூறினார் ஷெல்லாங்!
இருவரையும் சிறையில் அடையுங்கள்!
ஷெல்லாங்கின் புத்திசாலித்தனத்துக்காகவும் விசுவாசத்துக்காகவும் அரசர் அவரை மந்திரி ஆக்கினார்.


கோகுலம்
போஸ்டர்
BRITANNIA


ராகுல் திராவிட்

ஒரு சிலர் சிறிது நேரமே தூங்குகிறார்கள். சிலருக்கு தூக்கமே வருவதில்லை. இதுபோன்ற விஷயங்களுக்கு என்ன காரணம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. நமது மரபு அணுவில் உள்ள 'ஷரகெர்' என்ற ஜீன் தூக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. இங்கிலாந்து முன்னாள் பிரதமர் தாட்சர் மிக குறைந்த நேரமே தூங்குவார்.





தாட்சர் ஜீன்!


எனவே இந்த ஜீனுக்கு 'தாட்சர் ஜீன்' என்று பெயர் கொடுத்து இருக்கிறார்கள். இந்த மரபணுவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தூக்கம் தொடர்பான அனைத்து வியாதிகளையும் குணமாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

- நெ. பிரஜோற்பத்திகலை, பெருமாத்தூர்

ஷெர்லக் ஹோம்ஸ் என்ற உலகப் புகழ் பெற்ற துப்பறியும் நிபுணரை உருவாக்கிய சர் ஆர்தர் கானென் டாயல் ஏராளமான துப்பறியும் மர்மக் கதைகளை எழுதியிருக்கிறார். 1916 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை தன் வாழ்வில் கடைசிப் பதினான்கு வருடங்களில் அவர் பதிமூன்று தெய்வீகப் புத்தகங்களையும் எழுதியிருக்கிறார்.

- எம். அம்சலக்ஷ்மி, சென்னை

வாலி என்ற (volley) ஆங்கில வார்த்தைக்கு மாறி மாறி அடித்தல் என்று அர்த்தம். வாலி பால் என்ற ஆட்டத்திற்கு அதனால்தான் அப்பெயர் ஏற்பட்டது.



பாப்கார்ன் பிட்ஸ்

எகிப்தில் டென்னிஸ் என்று ஓர் ஊர் இருந்தது. அந்தக் காலத்தில் டென்னிஸ் விளையாடப் பயன்படுத்தும் பந்துகள் தயாரிப்பதற்கான நூலிழைகள் டென்னிஸ் நகரத்தில்தான் தயார் செய்யப்பட்டன. பிறகு அந்த ஊரின் பெயரான டென்னிஸ் என்பது இந்த விளையாட்டுக்கும் பெயராக அமைந்து விட்டது.

- ஜி. ப்ரணவ், கரூர்



அன்னாசிப் பழத்தின் இனிமையான வாசனைக்கு 'எதில்புடிரேல்' என்ற திரவமே காரணம்.

தங்கத்துடன் வெள்ளி அல்லது தாட்மியத்தைக் கலந்து தயாரிக்கும் தங்கத்தை 'பச்சைத் தங்கம்' என்கின்றனர்.

- ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்



சென்னையிலிருந்து கன்னியாகுமரி நோக்கி சூறாவளிப் புயல் வீசுகிறது என்று வைத்துக்கொள்வோம். சென்னையில் அந்தச் சூறாவளியில் சிக்கிய ஒருவர், மூன்று மணி நேரத்தில் கன்னியாகுமரியை வந்து அடைந்து விடலாம். சூறாவளிப் புயலின் வேகம் மணிக்கு 250 கிலோமீட்டர்!

- கு. அருணாசலம், தென்காசி

ஆஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டுபிடித்தவர்கள் முதன் முதலில் அந்த அதிசயப் பிராணியைப் பார்த்து இதன் பெயர் என்னவென்று அங்குள்ள ஆதிவாசிகளிடம் கேட்டார்கள். அவர்கள் 'கங்காரு' என்றார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த ஆதிவாசிகளின் மொழியில் கங்காரு என்றால் தெரியாது என்று பொருள்.



- சு. கண்ணகி, மிட்டூர்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டு பிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி **20.09.2005.**

I. பதில் என்ன?



1. லிபர்டி சிலை அமெரிக்காவில் எங்குள்ளது?
2. இந்தச் சிலையை அமெரிக்காவுக்கு வழங்கிய நாடு?
3. இதன் உயரம் எவ்வளவு?
4. இதை வடிவமைத்தவர் ஃபிரடெரிக் அகஸ்தே பார்தோல்டி - சரியா?
5. எந்த ஆற்றின் வாயிலில் அமைந்துள்ளது?

II. இசைக் கலைஞர்களின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













மாண்டலின் ஸ்ரீனிவாஸ்,
டிரம்ஸ் சிவமணி, சுதா ரகுநாதன்,
கத்ரி கோபால்நாத், ஜாகிர் ஹுசேன்,
பண்டிட் ரவிசங்கர்

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

....

....


....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.


அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்.) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வித்தியாசமான நத்தை எது?



விடை: C




நீங்கள் கடந்து செல்லும் வழி எண்களின் கூட்டுத் தொகை 100 மட்டுமே இருக்க வேண்டும்! வழி காட்டுங்கள்!

விடை: 12 + 3 + 5 + 30 + 17 + 25 + 8 = 100

"அப்பா, இந்த இரு குண்டர்களோடுதான் நாம் ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமா?" என்று ராதிகா கேட்டாள்.

"சே...சே... அப்படி சொல்லக் கூடாது. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள். பார், அவர்களின் உதவி எகிப்து நாட்டின் பணமான பவுண்டுகளைக் கொடுத்தார். அவர்கள் வாங்க மறுத்து விட்டனர். அவர்களே கார் ஏற்பாடு செய்ய அங்கிருந்து அலெக்ஸாந்திரியாவிற்குப் பயணமானார்கள்.

மர்மப் புத்தகம்!



யால் தானே நாம் கெய்ரோ அருங்காட்சி நிலையம், அதில் உள்ள புகழ்பெற்ற எகிப்து அரசரான டுட்டன் காமுனின் அளப்பறியா செல்வங்கள், இஸ்லாமிய மதத்தின் உயர்வுகளை எடுத்துரைக்கும் அருங்காட்சியகம், பிரமிடுகள், அதில் அதிசயமான 'ஸ்பிங்க்ஸ் பிரமிட்' என்று எத்தனை பார்த்தோம்!" என்றார் சங்கரன்.

அலெக்ஸாந்த்ரியா நகரத்திற்குப் புறப்படும்பொழுது சங்கரன் அந்த இரு அரேபியர்களுக்கும்

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி

கிரேக்க நாட்டு மாமன்னரான அலெக்ஸாந்தர் கட்டிய ஊர்தான் அலெக்ஸாந்திரியா. எகிப்து நாட்டின் கடல் வணிகம் இங்கிருந்துதான் நடைபெற்றது. ரோமாபுரி மன்னன் சீஸர், எகிப்து நாட்டு அரசி கிளியோபாட்ரா வாழ்ந்த ஊர் இது.


''நம் வீடு இருக்கும் ஏரியாவின் பெயர் 'கிளியோபாட்ரா' தெரியுமா?'' என்று சங்கரன் கூறியதை மிகுந்த ஆர்வத்துடன் மூவரும் கேட்டனர்.

''அப்பா, எகிப்து நாட்டின் கடலும் வானும் மிக அழகான நீல நிறமாக உள்ளது. பச்சைப் பசேலென ஈச்சமரங்கள், சிலு சிலுவென வீசும் காற்று, வெகு அருமை!'' என்றாள் மகிழ்ச்சியுடன் ராதிகா.

வீட்டு வாசலில் ஓர் அரபு நாட்டுப் பெண்மணியும் அருகில் ஒரு பையனும் இவர்களைப் புன்னகையுடன் வரவேற்றனர். ''சலாம் அலைக்கும், எங்கள் நாட்டிற்கு நீங்கள் வந்ததற்கு மிக்க மகிழ்ச்சி'' என்று அந்தப் பெண்மணி அரேபிய மொழியில் கூறினார். சங்கரன் அதை மொழி பெயர்த்தார்.

''ஹலோ, என் பெயர் அப்துல்லா. கீழ்வீட்டில் நாங்கள் குடியிருக்கிறோம். என் அம்மாவிற்கு ஆங்கிலம் வராது. அதனால் இனிமேல் அவர்களுடன் நீங்கள் பேச நான் உதவுகிறேன்'' என்று அந்த அரபு நாட்டுப் பையன் கூறினான்.

ராஜுவும் அப்துல்லாவும் வெகு சீக்கிரத்திலேயே நண்பர்களாகி விட்



டனர். அதைக் கண்டு சங்கரன் ''நம் குழந்தைகள் இத்தனை சீக்கிரமாக எகிப்து நண்பனை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கவேயில்லை'' என்று கூறினார்.

அப்துல்லாவுடன் அலெக்ஸாந்திரியா நகரத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினர். 'கார்னிஷ்' என்று அழைக்கப்படும் அழகிய கடற்கரைக்கு அழைத்துச் சென்றான். பிறை வடிவத்தில் கடற்கரையும் தங்க நிற மணலும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

''நாளை என் மாமா ரஹீம் வருகிறார். அவர் வந்தால் இன்னும் ஜாலியாக இருக்கலாம் தெரியுமா?'' அப்துல்லா மகிழ்ச்சியுடன் கூறினான்.

''அப்துல்லா, உன் அப்பா எங்கே?'' திடீரென்று ராதிகா கேட்டாள்.

''இஸ்ரேலுடன் நடந்த யுத்தத்தில் என் தந்தை வீரமரணம் அடைந்து விட்டார். எங்கள் நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற என் அப்பா எவ்வளவு கடுமையாகப் போராடினார் தெரியுமா!'' அப்துல்லா பெருமையுடன் கூறினான்.

ராஜு அவசரமாக, ''ராதிகா, அதோ பார், அந்த இரு குண்டர்கள் நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று தமிழில் கூறினான்.


ராதிகா அதிர்ச்சியடைந்தாள். ''என்ன ராஜு இது? சிறிது நாட்கள்கூட நாம் நிம்மதியாக இருக்கவில்லை'' என்றாள்.

ராஜு, ''ராதிகாவுக்கு உடல் நலம் சரியில்லை. உடனே ஒரு டாக்ஸி பிடித்து வீடு போய்ச் சேருவோம்'' என்றான். குண்டர்களும் இவர்களைத் தொடர்ந்து வீட்டை நோட்டம் விட்டனர்.

மறுநாள், ''என் மாமா ரஹீம்'' என்று அறிமுகப்படுத்தினான் அப்துல்லா. ''ஓஹோ, நீங்கள்தான் அந்த இந்திய நண்பர்களா? என் அக்காவும் அப்துல்லாவும் ஓயாமல் உங்கள் புராணம்தான் பேசுகிறார்கள்'' என்றார் ரஹீம்.

''என்ன செய்கிறாய் ரஹீம்?'' என்று சங்கரன் கேட்டார். ''எங்கள் தேசத்து கலை பொருட்களை அரசாங்க அனுமதியோடு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறேன். மற்ற தேசங்களின் கலை பொருட்களை இங்கு இறக்குமதி செய்கிறேன். எங்கள் நாட்டுக் கலாசாரமும் உங்கள் நாட்டுக் கலாசாரமும் மிக தொன்மையானது தெரி

யார் இந்தப் பிரபலம்?



மணிலாவில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு இயக்குனராக விளங்கினார்.


யுமா? அது சரி, எங்கள் நாட்டு விளையாட்டான கால்பந்து போட்டி இன்று மாலை இங்கு நடைபெற உள்ளது. வாருங்கள், உங்கள் எல்லோரையும் அழைத்து செல்கிறேன்'' என்று அன்புடன் அழைத்தார் ரஹீம்.

விளையாட்டு அரங்கம் நிரம்பி வழிந்தது. ஒரே கூச்சலும் உற்சாகமுமாக மக்கள் ஆர்ப்பரித்தனர். அப்பொழுது ராஜுவின் காதுக்கருகில் ''என்ன தம்பி, விளையாட்டை ரசிக்கிறாயா? அப்படியே புத்தகம் எங்கிருக்கிறது என்றும் கூறிவிடு'' என்று அக்பரின் குரல் கேட்டது.

ராஜுவின் கண்கள் பயத்தால் விரிந்தன. ''பயப்படாதே. அந்தப் புத்தகத்தினால் உன் உயிருக்கே ஆபத்து தெரியுமா?'' என்றார் அக்பர். ''முதலில் கையை எடுங்கள்'' என்று ராஜு கடுமையாகக் கூறினான். சத்தம் கேட்டு திரும்பிய ரஹீம், அக்பரைப் பார்த்து கோபமாக அரபு மொழியில் ஏதோ கூறினான்.

அவர்கள் பேசியதைச் சிறிது நேரம் கேட்ட அப்துல்லா, ''ராஜு, வா இங்கிருந்து போய் விடலாம்'' என்றான். ''ஆமாம், இந்தக் கிழவர் என்னை இந்தியாவிலிருந்து தொடர்கிறார். இவர் தொந்தரவு அதிகமாக உள்ளது. போலீசில் பிடித்துக் குடுக்க வேண்டும்'' என்றான் ராஜு.

''முட்டாள்தனமாகப் பேசாதே. வா போகலாம்'' என்று ராஜுவை இழுத்துக் கொண்டு ஓடத் துவங்கினான் அப்துல்லா. ராஜு ஒருமுறை திரும்பிப் பார்த்தான். அங்கு அக்பரும் ரஹீமும் ஏதோ கோபமாக விவாதிப்பது போலத் தெரிந்தது.



''எங்க கான்வென்ட்டில் ஐந்து எலிகள் சேர்ந்து பூனைக்கு மணி கட்டுகிற கதையை நாடகமாகப் போடப் போறோம்.''

''நாடகத்துக்கு பெயர் என்ன?''

''பாஞ்ச் எலி சபதம்!''

- டி. அருண்குமார்,
பத்தாம் வகுப்பு,
அழகிரி சுரேஷ் அரசு
உயர்நிலைப் பள்ளி,
ஆலாங்கொம்பு

அலெக்ஸாந்திரியா மெட்ரோ ரயில் நிலையத்திற்கு இருவரும் சென்றனர். அப்துல்லா டிக்கெட் வாங்கியவுடன், ராஜுவுடன் ரயில் ஏறினான்.

கிளியோபாட்ரா ஸ்டேஷன் வந்தவுடன் இறங்கும்பொழுது அவர்களை ஒரு முரட்டுக் கை பிடித்தது.

திரும்பிப் பார்த்த ராஜு, பயத்தால் உறைந்துபோனான். அந்த இரு அரபு குண்டர்களில் ஒருவன் ராஜுவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். மற்றொருவன் அப்துல்லாவின் கையை இறுகப் பிடித்தான்.

(தொடரும்)

இலங்கை ஒரு நீர் சொட்டு போல, இந்தியாவின் தென்கோடியில், இந்தியப் பெருங்கடலின் மேல் மிதந்து கொண்டிருக்கும் தீவு! இது ஒரு குடியரசு நாடு. ஆனால் கடந்த முப்பதாண்டு காலமாக, இலங்கை உலக மக்களின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக்கொண்டே இருக்கிறது. ஆம், சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் நடக்கும் உள்நாட்டுப் போர் இன்று வரை தொடர்கதையாகவே உள்ளது. இந்தியாவின் தென்முனையிலிருந்து 80 கி.மீ தூரத்தில் உள்ள இலங்கையை 'பாக்ஜலசந்தி'தான் இந்தியாவிலிருந்து பிரிக்கிறது.

இலங்கையை தமிழ்நாட்டினர் 'ஈழம்' என்றும், வடமொழியில் 'கி மறைத்தலீனியம்' என்றும், போர்த்துகீசியர்கள் 'சிங்களம்' என்பதை 'சைலோன்' என்றும் குறிப்பிடுகின்றனர். இதுவே ஆங்கிலத்தில் 'சிலோன்' என்று அழைக்கப்பட்டது. இந்துமத புராணப்படி, இலங்கையின் பெரும்பகுதி விஷ்ணுவின் ஏழாவது அவதாரமான இராமச்சந்திரரால் ஆளப்பட்டதாகக் கருதப்படுகிறது.




எழில் கொஞ்சும்



மோகனா

போவோமா புது உலகம்!



இலங்கை!

இலங்கையின் அலுவலகத் தலைநகர் 'ஜயவர்த்தனே புரம்'தான்! தெற்கேயுள்ள கொழும்பு, வியாபார மையமான பெரிய நகரம்! இதன் வடக்கு, மேற்கு, கிழக்கு கடற்கரைகளில், பனை


மரத்தால் சூழப்பட்ட நீர் நிரம்பிய 'லாகூன்கள்' எனப்படும் திட்டு, திட்டான நீர்த்திட்டுகள் உண்டு. வட கிழக்குக் கரையில் அமைந்துள்ள 'திரிகோணமலை' உலகின் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று. தென்மேற்கில் பெரிய துறைமுகம் கொழும்பு!

நம் இந்தியா போலவே பிரதமர் இருந்தாலும் ஜனாதிபதி போன்ற 'அதிபர்' பதவிக்கே பொறுப்பும் அதிகாரமும் அதிகம். இலங்கையின் மக்கள் தொகையில் 85% கிராமத்திலும், 15% மட்டுமே நகரத்திலும் வசிக்கின்றனர். இலங்கையில் புத்தமதம் கி.மு. 3ம் நூற்றாண்டிலேயே அறிமுகம் செய்யப்பட்டது. மக்களில் 69% பேர் புத்த மதத்தினர், 15% இந்துக்கள், 8% கிறித்தவர்கள், 8% முஸ்லீம்கள்.

இலங்கையின் அலுவலக மொழி சிங்களமும் தமிழும்.

இலங்கையைச் சுற்றி மன்னார் தீவு, நெடுந்தீவு, ஊர் காவல்துறை, புங்குடு தீவு, அழுவைத் தீவு, நயினார் தீவு, அலைத்தீவு போன்ற தீவுக் கூட்டங்களும், நடுவில் யாழ்ப்பாண தீபகற்பமும் உள்ளது. இலங்கையில் பெரும்பாலும் மலைப் பிரதேசங்கள்தான் அதிகம். மிக உயரமான சிகரம் பிதுருதலகலை (8291 அடி). இதுவே 'ஆதாமின் உச்சி' என்று அழைக்கப்படுகிறது.

'மகாவலி கங்கை' என்பதுதான் இலங்கையின் நீண்ட ஆறு (206 மைல் நீளம்). அருவை ஆற்றங்கரையில், பண்டைக்கால தலைநகரமான அனுராதபுரம் இருந்தது. இது வரலாற்றில் மிக அழகான நகரம் என்று பேசப்பட்டது. நிறைய ஆறுகளும் ஓடைகளும் ஓடி, இலங்கையை இயற்கைச் செழிப்பில், கொழிக்க வைக்கின்றன. மத்திய பீடபூமியைச் சுற்றிலும் காணப்படும் நீர் வீழ்ச்சிகள், மனதைக் கொள்ளை கொள்ளும் அற்புதமான இயற்கையழகு கொஞ்



சும் இடங்களாகும்! அங்கே இயற்கையின் சக்தி வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இயற்கையன்னை இலங்கைக்கு அளித்த அழகைக் கண்டு, ரசிக்க உலகம் முழுவதிலு





மிருந்து மக்கள் வந்தவண்ணம் உள்ளனர்.

இலங்கை நில நடுக்கோட்டுக்கு அருகே அமைந்துள்ளதால், சீரான வெப்ப நிலையும் இதமான ஈரப்பதமும் இணைந்தே காணப்படுகிறது. விவசாயம் செழிப்பாக நடைபெறுவதால், பொருளாதாரம் விவசாயத்தைச் சார்ந்தே உள்ளது. நெல், தேங்காய், ரப்பர், தேயிலை, புகையிலை, கோக்கோ இலவங்கம், ஏலம் போன்ற வாசனைப் பொருட்களும் கனிம வளமும், மாணிக்கம் வைடூரியம் போன்ற விலை மதிப்புள்ள கற்களும், பட்டை தீட்டப்பட்ட கிராபைட்டும் இலங்கையின் மதிப்பை உயர்த்திப் பிடிக்கின்றன.

இலங்கையின் பெரும்பகுதி காடாக உள்ளதால், தீவின் முக்கால் பகுதி சாகுபடி செய்யப்படாத நிலமே உள்ளது. இலங்கை வித்தியாசமான மரங்கள், தாவர வகைகளுக்குப் புகழ் பெற்ற நாடு. காடுகளில் சிறுத்தைப்புலி, பாயும் புலி, யானை, குரங்குகள், பலவகை பறவைகள், ஊர்வன போன்றவை வாழ்கின்றன.

'கோலம்' என்ற நடன நாடகம்' முன்பு ஒரு காலத்தில் தென் இலங்கையில் பிரபலமானது. இப்போதும்கூட இது நடத்தப்படுகிறது. மதம், இலங்கை மக்கள் வாழ்க்கையில் முக்கிய பங்காற்றுகிறது.

இவர்களின் முக்கிய உணவு அரிசிதான்! இவர்களது உணவு முறையும் சமையல் முறையும் எல்லா வகை மக்களையும் சார்ந்து உள்ளது. இலங்கையின் உணவு வகைகள் உலகப் புகழ் பெற்றவை! குறைவான இறைச்

ஓவியப் போட்டி

பெரிய அலகுடைய ஹார்ன் பில் எனப்படும் மலை



மொங்கன் பறவையைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **ஹார்ன் பில்.** உங்கள் கற்பனைக்கேற்றவாறு வண்ணத்தில் படத்தை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 9.9.2005

கோகுலம் சுழல் கோப்பை

இந்த ஆண்டு சுழல் கோப்பையைப் பெறப் போவது எந்தப் பள்ளி? இன்னும் மூன்றே மாதங்களில் தெரிந்துவிடும். போட்டியில் கலந்து கொண்டுள்ள பள்ளிகளிடையே கடுமையான போட்டி நிலவுவதால் உடனே நிறையப் படைப்புகளை அனுப்பினால்தான் கோப்பையை வெல்ல முடியும். படைப்புகளை அனுப்பி வையுங்கள்; கோப்பையை வெல்லுங்கள்!

சியும் அதிகமான பருப்பு, கொட்டை வகைகள், தேங்காய் உண்பர்.

'பந்தரஸீலா' பகுதியில் மத்திய கற்கால பொருட்கள், எலும்புகள், சமீபத்திய கற்கால கருவிகள் போன்றவை தோண்டியெடுக்கப்பட்டன. பழங்காலத்தில் ஆரிய மொழி பேசியவர்களே இலங்கையை ஆண்டனராம்! ஆந்திரர், குப்தர், பல்லவர், சோழர், பாண்டியர், விஜய நகரர் என பலர் ஆட்சி புரிந்திருக்கின்றனர். சிங்களர்களின் சிற்பங்கள் மரத்தால் செய்யப்பட்டன. வட்டமாக கோயில்கள் கட்டுவது சிங்கள சிற்பக் கலையின் சிறப்பு அம்சம். இவர்கள் கற்குடைவு கோயில்களையும் அமைத்தனர். சுண்ணாம்பு கற்களில் ஆன சிற்பத்தில், தொட்டியிலிருந்து செடி கிளம்புவது போன்ற அமைப்பு எல்லாவற்றிலும் இருக்கும். சிங்கள எழுத்து பண்டைய 'பிராமி' எழுத்திலிருந்து பரிணமித்தது என்று சொல்லப்படுகிறது. பழங்காலத்தில் ரோம் நாட்டுக்கும், சீன நாட்டுக்கும், மேற்கு நாடுகளுக்கும் இலங்கையுடன் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது. பல வகையில் இலங்கை வரலாற்று சிறப்பு மிக்க புராதன நாடாகவே திகழ்கிறது.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்:

1. முருகனின் அன்னை (4)

4. தண்ணீர் என்பது ஒரு ________ (4)

6. பூமி மூன்றாவது ________ (4)

12. வரலாற்றில் மிக முக்கியப் போர்களில் ஒன்று (4)

13. முக்கனிகளில் மூன்றாவது கனி (2)

14. கைகளில் அணியும் அணிகலன் (4)

வலமிருந்து இடம்:

1. கொடி காத்தவர் (4)

3. மழை (2)

11. கிழக்கில் தோன்றி, மேற்கில் மறைவது (4)

15. உலோகங்களில் ஒன்று; பாத்திரம் செய்யப் பயன்படும் (4)

மேலிருந்து கீழ்:

1. பாவேந்தர் (6)

2. வெய்யில், மழையிலிருந்து நம்மை இது காக்கும் (2)

7. அழகி (2)

9. காற்று நிரம்பிய இந்த உணவுக்கு கிழங்கு ஜோடி (2)

10. சந்நியாசி (2)

13. விலங்குகளுக்கு இது அவசியம். ஆடிக் கொண்டே இருக்கும் (2)

கீழிருந்து மேல்:

3. துள்ளி ஓடும் புள்ளி ________ (2)

5. ________ அனை வரும் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு (2)

8. பழம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

12. கள்ளி ஒரு ________ தாவரம் (2)

14. பாதை (2)

15. தங்கத்தைவிட விலை உயர்ந்த உலோகம் (6)

விடை 79ஆம் பக்கம்

- அ. அஸ்ரா கவுசர்,
ஒன்பதாம் வகுப்பு,
அ.ம.மே.நி.பள்ளி, ஆரணி

காது கேட்காதது

உதவியாக இருக்கிறது!

தாமஸ் ஆல்வா எடிசன் காது கேளாதவர். பல தடவை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது அவர் கவனம் முழுவதும் கண்டுபிடிக்க வேண்டிய பொருளின் மீதே இருந்தது. ஒரு நாள் அவரது நண்பர் ஒருவர் ''எடிசன், உங்களுக்கு காது கேட்கவில்லை. இந்தக் குறைபாடு உங்களை எந்த அளவிற்குப் பாதித்துள்ளது?'' என்றார்.



* எடிசன்



* கி.வா. ஜகந்நாதன்

அதற்கு அவர் ''எனக்கு காது கேட்கவில்லை என்பதற்காக நான் வருத்தப்படவில்லை. அது எனக்குப் பல வகையில் உதவியாக உள்ளது. நான் ஆராய்ச்சியின் மீதே என் மனதைச் செலுத்தும்போது யார் கூப்பிட்டாலும் எனக்குக் காது கேட்காது. என் எண்ணம் சிதறாமல் இருக்க அது உதவுகிறது'' என்றார்!

- ஆ. கீதா அகரம்

சிறுவனின் துணிச்சல்!

சிறுவன் ஒருவன் ஒரு நூல் நிலையத்தில் சட்டையில்லாமல் உட்கார்ந்து புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

சட்டை போடாமல் படிப்பதைப் பார்த்த நூல் நிலைய உதவியாளர், அந்தச் சிறுவனின் அருகே வந்து ''தம்பி! இப்படி மேல் சட்டை போடாமல் படிக்கக் கூடாது'' என்றார்

உடனே அந்தச் சிறுவன், ''சட்டை போட்டுக் கொள்ளாமல் படிக்கக் கூடாது என்று நூலக விதி இருக்கிறதா? அப்படி ஏதேனும் விதியிருந்தால் காட்டுங்கள், பார்க்கலாம்!'' என்றான்.

மேலதிகாரியிடம் போய் விஷயத்தைக் கூறினார்.

அந்தச் சிறுவனைத் தன் அறைக்கு வரவழைத்த மேலதிகாரி ''சட்டையணியாமல் இருப்பது நாகரிகமல்லவே?'' என்றார்.

அந்தச் சிறுவன் மிகத் துணிச்சலுடன் ''சிறுவர்களாக இருந்தாலும் உட்காரச் சொல்லி விட்டுப் பேசுவதுதான் இந்த நாட்டின் நாகரிகம்!'' என்றான்.

நல்லது!

அந்தச் சிறுவனின் துணிச்சலான பதிலைக் கேட்டு வியந்த மேலதிகாரி உடனே ஒரு நாற்காலியைப் போட்டு அவனை உட்காரச் சொல்லி, அவன் சொல்வதைப் பொறுமையோடு கேட்டார்.

வெப்ப நாடாகிய பாரதத்திற்கு ஏற்ற உடைப் பழக்கம் பற்றித் தெளிவாக அந்த மேலதிகாரிக்கு விளக்கினான்.

அவனது துணிவையும், அறிவுத் திறமையையும் கண்டு வியந்தார் அந்த மேலதிகாரி.

அந்தச் சிறுவன்தான் வினோபாஜி.

- ர. மகாலக்ஷ்மி,
காஞ்சிபுரம்

விருந்து...

கி.வா. ஜகந்நாதன் அவர்களை விழா ஒன்றுக்குத் தலைமை தாங்க அழைத்திருந்தனர். விழா முடிவில் கி.வா.ஜவிடம் மாலைகளையும் சில பழங்களையும் ஒரு பையில் போட்டுக் கொடுத்தனர்.

உடனே கி.வா.ஜ. வேடிக்கையாக, "என்னைப் பெரியவனாகக் கூப்பிட்டு 'பை'யனாக அனுப்புகிறீர்களே!" என்று கூறி சிரிப்பு ஒலியில் விண்ணை பிளக்கச் செய்தார்.

- குட்டி பிரசன்னா, கரூர்

ஏலம்!

காசியில் இந்து பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்க நிதி திரட்டிய மாளவியா, ஐதராபாத் நவாப்பிடம் நன்கொடை கோரினார். நவாப்போ ஆத்திரமடைந்து செருப்பைக் கழற்றி வீசினார். பதிலேதும் சொல்லாது வெளியேறிய மாளவியா அந்தச் செருப்பைக் குறைந்த விலைக்கு ஏலம் விடத் தொடங்கினார்.

தனது செருப்பு குறைந்த விலைக்கு ஏலம் போனால் அவமானமாகி விடுமென எண்ணிய நவாப் உடனே அரண்மனைப் பிரதிநிதி ஒருவரை அனுப்பி ஒற்றைச் செருப்பைப் பெருந் தொகைக்கு ஏலம் எடுத்தார். அந்தப் பணம் பல்கலைக் கழகம் உருவாக உதவியது.

- நெ. இராமன்,
சென்னை



* வினோபாஜி



* மாளவியா

கல்லைத் தங்கமாக்கும்

குட்டையூரில் கந்தன், நந்தன் என்ற இரண்டு சிற்பிகள் வசித்து வந்தனர். ஆனால் வறுமையில் வாடினர்.

நாட்கள் ஓடின.

கந்தன் கடுமையாய் உழைத்தான்.

ஒரு நாள்...

கந்தன் மாட்டு வண்டியில் தான் செய்த சிலைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு பக்கத்து ஊர் சந்தைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அவன் மனைவி, "என்னங்க! சந்தைக்குப் போகிற வழியில் முதலில் நீங்கள் பக்கத்திலிருக்கிற சிவன் மலைக்குப் போங்கள். அங்கே இமய மலையிலிருந்து ஒரு மகரிஷி வந்து தங்கியிருக்கிறாராம். அவரிடம் ஆசீர்வாதம் வாங்கிட்டு அப்புறம் உங்க வியாபாரத்தைச் செய்யுங்கள்" என்று சொன்னாள்.

அவனும் சரியென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். சிறிது நேரத்தில் சிவன் மலை போய்ச் சேர்ந்தான்.

மகரிஷியைப் பார்த்து பய பக்தியோடு அவருடைய காலில் விழுந்து வணங்கினான். அவனுடைய மரியாதையைக் கண்ட மகரிஷி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

"நான் இங்கே பெரிய தியான மண்டபம் ஒன்று கட்டப் போகிறேன். அதற்கு நிறைய சிலைகள் தேவைப்படுகின்றன. உன்னிடமுள்ள அழகான இந்தச் சிலைகளையெல்லாம் நானே வாங்கிக் கொள்கிறேன்" என்று அவர் கூறியதைக் கேட்டதும் கந்தனுக்கு வந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை!



பிறகு "நீ எனக்கு ஒரு நடராசர் சிலை - தங்க விக்கிரகம் செய்து தரவேண்டும். என்ன சொல்கிறாய்?" என்றார் மகரிஷி.


"தங்க விக்கிரகமா! சாமி, தங்கத்துக்கு நான் எங்கே

மூலிகை!

காரமடை துரை.முருகேசன்

போவேன்?'' என்று தயங்கியபடி பதில் கூறினான் கந்தன்.

''கவலைப்படாதே! நான் உனக்கு கல்லைத் தங்கமாக்கும் அதிசய மூலிகைச் செடி களைத் தருகிறேன். அந்த மூலிகையில் சாறு பிழிந்து, நாற்பத்தெட்டு நாட்கள் ஒரு மண்டலம் அந்தச் சாற்றில் நீ செய் யும் சிலைகளைப் போட்டு யாருக்கும் தெரி யாமல் மூடிவை. ஒரு மண்டலம் கழித்து அந்தச் சிலைகளைப் பார். எல் லாம் தங்கமாகி விடும்'' என்றார் மகரிஷி.



கந்தன் வீட்டிற்குப் போய் தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். அவளுக்கு அளவில் லாத மகிழ்ச்சி. கடவுள் கண் திறந்து விட்டார் என்று கடவு ளுக்கு நன்றி கூறினாள்.

நாற்பத்தெட்டு நாட்கள் ஓடி மறைந்தன. கந்தன் நம்பிக்கை யோடு சிலைகளைத் திறந்து பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! ஒரே சமயத் தில் ஆயிரம் சூரியன்கள் உதித் தது போல் வீடு முழுவதும் தங் கத்தின் ஒளி ஜகஜோதியாய் டால் அடித்தது. அதைக் கண்டதும் கந்தன், அவன் மனைவி, குழந் தைகள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

உடனே கந்தன் தங்க நடராசர் சிலையை எடுத்துக் கொண்டு மகரிஷியிடம் ஓடினான். பயபக்தி யோடு அந்தச் சிலையை மகரிஷி யிடம் கொடுத்தான்.

அவனுடைய நேர்மையைக் கண்டு மகரிஷி மகிழ்ந்தார். ''அப் பனே! நீ சொன்ன' சொல்லைக்

காப்பாற்றினாய். தங்கச் சிலையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள் கிறேன்'' என்றார்.

''சாமி! என்னிடம் இருக்கும் மீதி சிலைகளை என்னங்க செய் வது?'' என்று கேட்டான்.

கந்தனின் மனதைக் கண்டு வியந்து, ''அப்பனே! மீதியுள்ள சிலைகளை விற்று அந்தப் பணத் தையெல்லாம் நீயே வைத்துக் கொள். குடும்பத்தைக் காப்பாற்று. ஏழை எளியோர்க்கு உதவி செய்'' என்று கூறினார்.

கந்தன் சிலைகளை விற்றான். கோடீஸ்வரனானான். தான தருமங்கள் செய்தான்.

கந்தனுக்கு வந்த புது வாழ் வைக் கண்டு நந்தன் பொறாமைப் பட்டான், எப்படியாவது அவன் எப்படி பணக்காரன் ஆனான் என்பதைத் தெரிந்து, கந்தனை மட்டந்தட்ட வேண்டுமென்று நினைத்தான்.

நந்தன் கந்தனிடம் நெருங்கிப் பழகி சிவன் மலை மகரிஷியைப் பற்றி எல்லா விபரங்களையும் எப்படியோ தெரிந்து கொண்டான்.

ஒரு நாள் நந்தன் மகரிஷி யைப் போய்ப் பார்த்தான். தன் வறுமையைக் கூறி, 'கந்தனைப் போல நானும் பணக்காரனாக ஆசைப்படுகிறேன். அதற்கு நீங் கள் தான் உதவி செய்ய வேண் டும்'' என்று கெஞ்சி அழுதான்.


மகரிஷிக்கு அவன்மேல் சந் தேகமேற்பட்டது. பேராசைக் காரனாக இருப்பான் போலிருக் கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். ஆனாலும் அந்த அதிசய மூலிகையை அவனுக்குக் கொடுத்து ஒரு தங்கச் சிலை யைக் கொண்டுவந்து கொடுக்கும் படி கூறினார். சரி என்று தலை யாட்டிவிட்டு நந்தன் மூலிகை யுடன் வீடு திரும்பினான்.

நாட்கள் வேகமாக ஓடின. நந்தன் செய்த சிலைகளும் தங்கச் சிலைகளாக மாறின. அவன் மன தில் குடி கொண்டிருந்த பேராசை தலைதூக்கியது. 'மகரிஷிக்கு ஏன் சிலையைக் கொடுக்க வேண் டும்?, எல்லாச் சிலைகளையும் நாமே வைத்துக் கொண்டால் என்ன?' என்று நினைத்தான்.

மகரிஷியிடம் சென்றான். அழுது கொண்ட பேசினான்.

''சாமி! நீங்கள் சொல்லியபடி தங்கச் சிலைகள் செய்தேன். ஆனால், திருடர்கள் வந்து அதைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். நான் என்ன செய்வேன்?'' என்று அழுதான்.

யார் இந்தப் பிரபலம்?



இந்தியாவில் 'பசுமைப் புரட்சியின் தந்தை' என்று கருதப்படுபவர்.

மகரிஷி அதை நம்ப வில்லை. "உன்னிடம் இருப்பது தங்கம் என்பதைத் தெரிந்துதானே திருடர்கள் திருடினார்கள். இனி மேல் யாரும் அதைத் திருடாமல் இருக்க நான் ஒரு வழி சொல் கிறேன். கேட்கிறாயா?" என்று கேட்டார் மகரிஷி.

"சொல்லுங்க சாமி" என்றான் கந்தன்.

"இனிமேல் நீ செய்யும் சிலை கள் உன் கண்களுக்கு மட்டும் தான் தங்கமாகத் தெரியும். மற் றவர் கண்களுக்கு அது கல்லாகத் தான் தெரியும். இனி நீ யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. போய் விட்டு வா" என்றார் மகரிஷி. நந்தன் நன்றி கூறிவிட்டு வீடு திரும்பினான்.

எப்படியோ மகரிஷியை ஏமாற்றி விட்டோம் என்று மகிழ்ச்சியோடு வீடு திரும்பிய நந்தன் உடனடியாக எல்லாச் சிலைகளையும் விற்று சீக்கிரம் செல்வச் சீமானாக மாறி விடலாம் என்று பேராசைப் பட்டான்.

தனக்குத் தெரிந்த தங்க நகை வியாபாரிகளையெல்லாம் வீட்டிற்கு வரச் சொன்னான்.

"என்னிடம் நூற்றுக் கணக்கில் தங்கச் சிலைகள் இருக்கின்றன. உங்களுக்கு கந்தன் விற்ற விலை யைவிடக் குறைந்த விலைக்கு நான் சிலைகள் தருகிறேன். சிலைகளைப் பார்க்கிறீர்களா?" என்று அவர்களைக் கேட்டான்.

வியாபாரிகளும் சிலைகளைக் காட்டுங்கள் என்றார்கள்.

எல்லோரையும் சிலைகள் இருந்த வீட்டிற்குள் அழைத்துச் சென்றான். அங்கே மலைபோல் ஏராளமான சிலைகள் கொட்டிக் குவிந்து கிடந்தன. அவற்றையெல் லாம் பார்த்துவிட்டு வெளியில் வந்து உட்கார்ந்தார்கள்.

"தங்கச் சிலை இருப்பதாக நீங்கள் சொன்னீர்கள். வீட்டிற்குள் ஒரு தங்கச் சிலையைக் கூடக் காணவில்லையே, எல்லாம் கல் லாகத்தானே இருக்கிறது" என்றார் அந்த வியாபாரி.

நந்தனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ஐயோ மோசம் போனேன்' என்று கத்தினான். மகரிஷி சொன்ன விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. எனக்கு மட்டும் தங்கமாகத் தெரியும் சிலைகள் மற்றவர் கண்களுக்குக் கல்லாகத் தெரியும் என்று சொன்னாரே! ஐயோ நான் என்ன செய்வேன்?. எனக்கிருந்த பேரா சைக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டதே!' என்று அப் படியே சிலை போல் நின்றான்.



"மேல் நோக்கி விழும் பொருள் கீழ் நோக்கி விழக் கார ணம் என்ன?"

"மேலே அதைப் பிடிக்க யாரும் இல்லாத காரணத்தால் தான் கீழே விழுது சார்!"

- ஜி.என். பவித்ரா



பெயர் எப்படி

1. திண்டாசுரன் எனும் தீய வனைத் தெய்வீகசக்தி கல்லாக மாற்றிய இடம் திண்டுக்கல்.

2. கொங்கு மன்னர்கள் ஆண்ட கோவன்புத்தூர் மருவிக் கோயம்புத்தூர்.

3. திரிசிரன் என்ற அசுரன் இங்குள்ள இறைவனை வணங்கி நல்ல புத்தி பெற்ற ஊர் திரி சிராப் பள்ளி. கயிலாயத்தின் ஒரு சிகரம் இங்கு வந்து விழுந்ததால் திரு சிகரப்பள்ளி என்றும் கூறு வர்.


4. ஒருமுறை பிரளயம் வந்து எல்லா உயிரினங்களும் நீரில் மூழ்கியபோது இறைவன் எல்லா உயிர் வித்துகளிலும் வகைக்கு ஒன்றாக ஒரு கும்பத்தில் இட்டு நீரில் மிதக்க விட்டாராம். அந் தக் கும்பம் வந்து சாய்ந்தபடி ஒதுங்கிய இடமே கும்பகோணம். பிறகு உலகம் மீண்டும் தழைத்த தாம்.

5. புராண வரலாற்றின்படி பிரம்மனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எடுத்த சிவ பிரானது கைகளில் அந்த ஈர மான மண்டையோடு ஒட்டிக் கொண்ட தலம், எனவே ஈர ஓடு இன்று ஈரோடு ஆனது.

6. மூன்று பெருங்கடல்களும் சந்திக்கும் முனையில் தேவி குமரியாக நின்று தவம் செய்வ தால் கன்யாகுமரி என்று பெயர் வந்தது.

7. காஞ்சிபுரம் என்பது வட மொழிச் சொல். தமிழில் கச்சி என்றால் பெரிய மதில் என்று பொருள். மிகப்பெரிய மதில் களால் சூழப்பட்ட ஊர் என்பது தான் காஞ்சிபுரம்.

8. வில்லுப்புரம் என்பதுதான் சரி. ராமாயணக் கதையின்படி மாய மானாக வந்த மாரீசனை அடிப்பதற்கு ராமன் வில்லை வளைத்த இடம் இது என்பதால் வில்லுப்புரம் எனப்பட்டது. மூன்று அசுரர்களை அழிக்கச் சிவ பெரு மான் வில்லை எடுத்த தால் வில்லுப்புரம் என்றும் சொல்வர்.




எதற்குப் பெயர் போனது?



திண்டுக்கல் - மலைப் பழம், பூட்டு, தஞ்சாவூர் - கதம்பம், தலையாட்டி பொம்மை, மதுரை - மல்லிகைப்பூ, திருநெல்வேலி - அல்வா, சேலம் - மாம்பழம், திருச்சி - வாழை, கும்பகோணம் - வெற்றிலை, திருப்பூர் - பனியன், ராஜபாளையம் -கோம்பை நாய், கோவில்பட்டி - கடலை மிட்டாய், சிவகாசி - பட்டாசு, மணப்பாறை - முறுக்கு, பண்ருட்டி - மண் பொம்மைகள், பலாப்பழம் நெய்வேலி - முந்திரி குற்றாலம் - சுக்குப் பனைவெல்லம், காஞ்சிபுரம் - பட்டு, பத்தமடை - பாய், பவானி - ஜமக்காளம், நீலகிரி - தேயிலை, கன்யாகுமரி - சோழி, கிளிஞ்சல் கைவினைப் பொருட்கள்.

வந்தது?







எப்படி ஆற்றைக் கடப்பார்கள்?

I. இரண்டு நண்பர்கள் ஒரே ஊருக்குச் செல்வதற்காக நகரப் பேருந்தில் ஏறினார்கள். அவரவர்க்கு வேண்டிய பயணச் சீட்டை அவரவர்களே எடுத்துக்கொள்வது வழக்கம். முதலாமவர் கண்டக்டரிடம் இரண்டு ரூபாய் தந்தார். கண்டக்டர் இரண்டு ரூபாய்க்கான டிக்கெட் ஒன்றைத் தந்தார். இரண்டாமவரும் கண்டக்டரிடம் இரண்டு ரூபாய் தந்தார். ஆனால் கண்டக்டரோ அவரைப் பார்த்து, 'எந்த ஊர் செல்கிறீர்கள்?' என்று கேட்டார். கண்டக்டர் ஏன் இரண்டாமவரை மட்டும் எந்த ஊர் செல்கிறீர்கள் என்று கேட்டார்?

- ஜெ.ம.சதீஷ்குமார்,
சிவகாசி

II. கந்தன் கூடையில் சில மாம்பழங்களோடு வீடு திரும்பினான். அவனது மகன் அறிவழகன் "எத்தனை மாம்பழங்களை விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றீர்கள்? விற்பனை ஆகாமல் எத்தனை பழங்கள் கூடையில் இருக்கின்றன?" என்று கேட்டான். அதற்கு கந்தன், "நான் எத்தனை பழங்கள் எடுத்துச் சென்றேன் என்று நினைவு இல்லை. என்னிடம் மூன்றுபேர்தான் பழம் வாங்கினார்கள். முதலாமவர் என்னிடம் உள்ள பழங்களில் பாதியையும், அத்துடன் அரை மாம்பழத்தையும் வாங்கினார். அதேபோல இரண்டாமவரும் மீதி உள்ள பழங்களில் பாதியையும் அத்துடன் அரை பழத்தையும் வாங்கினார். மூன்றாமவரும் அதேபோல் மீதி உள்ள பழங்களில் பாதியையும் அத்துடன் அரைபாகத்தையும் வாங்கினார். நான் யாருக்கும் பழத்தை அரிந்து தரவில்லை. கூடையில் ஐந்து பழங்கள் மீதி உள்ளன. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்" என்றார்.

மகன் அறிவழகன் ஏதோ கணக்குப் போட்டுப் பார்த்தான். தன் தந்தை எடுத்துச் சென்ற பழங்கள் எத்தனை என்று அவனால் சொல்ல முடிந்தது. எத்தனை பழங்கள் என்று உங்களால் சொல்ல முடியுமா?

- கி. சிந்து, மயிலாடுதுறை

III. கடிகாரம் பொதுவாக அரைமணியை அறிவிப்பதற்கு ஒரு மணியும் எத்தனை மணியோ அதனை அறிவிப்பதற்கு அத்தனை முறையும் ஒலிக்கும். நல்ல முறையில் ஓடும் கடிகாரம் தொடர்ந்து மூன்று முறை ஒரு தடவை தான் ஒலிக்கும். அது எப்பொழுது?

- எஸ். அருண்குமார், தஞ்சாவூர்

IV. 1 முதல் 9 வரை உள்ள எண்களைப் பயன்படுத்தி இந்த மாய சதுரக் கட்டத்தினுள் எப்படி கூட்டினாலும் 15 வர வேண்டும்.


- நெ. பிரஜோற்பத்திகலை, புவனகிரி

V. ஆறுமுகத்திற்கு நான்கு குழந்தைகள். மணி, கீதா, சுமதி, லக்ஷ்மி. மணியின் எடை 25 கிலோ. கீதாவின் எடையும் அதுவே. சுமதியின் எடை 50 கிலோ. லக்ஷ்மியின் எடையும் அதுவே. ஒருமுறை அவர்கள் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. ஆழமான ஆறு. எனவே நடந்து போக முடியாது. கரையில் படகு ஒன்று இருந்தது. ஆனால் படகுக்காரன் கிடையாது. குழந்தைகள் நால்வருக்கும் படகுவிடத் தெரியும். ஆனால் ஒன்றாகப் போக முடியாது. ஏனெனில் அந்தப் படகு மிகவும் சிறியது. அது 50 கிலோ எடைக்குமேல் கொள்ளாது. நால்வரும் எப்படி ஆற்றைக் கடப்பார்கள்?

- ஆ. கீதா வேலூர்



விடை 79 ஆம் பக்கம்



காவிரி நதி பாயும் பழையாறையில் வாழ்ந்தவர் அமர்நீதியார். நீதி அவரிடம் அமர்ந்திருக்க வேண்டும் என்றே பெற்றோர் அப் பெயரிட்டனர். அவரும் அப் பெயரைக் காத்து வந்தார். அவர் சிவனடியார்களுக்குப் போர்வையும் துண்டும் தானம் கொடுத்து வந்தார்.

துறவிகள் துண்டு மட்டுமே அணிவர். இரவில் குளிர் தாங்காமல் போர்த்துக்கொள்வர்.

ஒரு சமயம் திருநல்லூர் திருவிழாவுக்குக் குடும்பத்தோடு சென்றிருந்தார் அமர்நீதி. அங்கே அவர் ஒரு மடம் கட்டியிருந்தார். அந்த மடத்தில் அன்னதானமும் வஸ்திர தானமும் செய்தார்.

சிவபெருமான் அவரைச் சோதிக்க அந்தணத் துறவியாய் வந்தார். அவரை வரவேற்று உணவு உண்ணும்படி உபசரித்தார் அமர்நீதி.

''நான் இன்னும் ஸ்நானம் செய்யவில்லை. காவிரியில் நீராடி வருகிறேன். மழை வரும் போலிருக்கிறது. எனக்குக் குளிர் தாங்காது: இந்த உலர்ந்த துண்டைப் பத்திரமாக வைத்துத் திருப்பித்தர வேண்டும். தொலைத்து விட்டு வேறு துண்டு தருகிறேன், பணம் கொடுக்கிறேன் என்றால் ஒப்புக் கொள்ள மாட்டேன். இது சிறப்பானது. வேதம் சொல்லி நெய்தது. பத்திரம்'' என்று பலமுறை எச்சரித்து தன் துண்டை அவிழ்த்துக் கொடுத்து விட்டுச் சென்றார்.

அமர்நீதியார் அதை ஒரு பெட்டியில் பாதுகாப்பாய் வைத்து மூடினார்.

சிவபெருமான் சொட்டச் சொட்ட வந்தார்.

''அமர்நீதி! உடல் விறைப்பதற்குள் துண்டு எடுத்து வாருங்கள்'' என்றார்.

அமர்நீதியார் சென்று பேழையைத் திறந்தால் மடித்து பத்திரப்படுத்திய துண்டைக் காணவில்லை! மனைவியை, மகனை, பணியாட்களைக் கூப்பிட்டு விசாரித்தார். அவர் உடலும் மனமும் பதறியது.

எவருக்கும் துண்டு பற்றி எதுவும் தெரியவில்லை! ''அமர்நீதி! துண்டு நெய்கிறீரா?'' என்று கூவினார் சிவத்தொண்டர்.




புதிய துண்டோடு வந்தார் அமர்நீதி.

''மன்னிக்க வேண்டும். நீங்கள் அத்தனை எச்சரித்தும் அது காணாமல் போய் விட்டது. பெரிய மனது பண்ணி இதை ஏற்க


ஆர்.பொன்னம்மாள்
தராசில் அமர்ந்த
அமர்நீதி!

யார் இந்தப் பிரபலம்?



கும்பகோணத்தில் பிறந்தவர்.

வேண்டும். இது தனியாக நெய்தது'' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

''பேஷ், இதுதான் தானம் செய்கிற லட்சணமா? சிறப்பானதைக் கவர்ந்து கொள்வீரோ?'' என்று கொதித்தார் சிவத் தொண்டர்.

''ஐயனே! நான் வேண்டுமென்று இத்தவறைச் செய்யவில்லை! அந்தத் துண்டுக்கு ஈடாக நவரத்தினங்களையும் தங்கக் கட்டிகளையும் தருவேன். தாங்கள் இடும் பணியையும் செய்து முடிப்பேன். பிழை பொறுத்தருள்வீர்'' என்று கெஞ்சினார் அமர்நீதி.

திருமடத்துக்கு உணவருந்த வந்தவர்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.

சற்றே சமாதானமானாற் போல் சிவத் தொண்டர்,

''பொன்னும் மணியும் எனக்கெதற்கு? தராசைக் கொண்டு வரச் சொல்லுங்கள். ஒரு தட்டில் எனது மற்றொரு துண்டை வைக்கிறேன். அதற்குச் சமமாக துண்டு கொடுத்தால் போதும்'' என்றார்.

ஒரு பெரிய தராசு கொண்டு வரப்பட்டது. ஒரு தட்டில் சிவத் தொண்டரின் ஈரத் துண்டு, மறு தட்டில் அமர்நீதி துண்டு, போர்வைகள், பட்டாடைகள், தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் குவியல் குவியலாக இட்டும் ஈசனின் துண்டு வைத்த தட்டு உயரவே யில்லை!

சிவத் தொண்டர் இகழ்ச்சியாகப் புன்னகைத்தார். அமர்நீதியார் 'குலத்துக்கே களங்கமானதே' என வருந்தினார்.

''ஸ்வாமி! நானும் என் மனைவியும் என் சிறிய மைந்தனும் தான் பாக்கி. தாங்கள் உத்தரவிட்டால் நாங்கள் ஏறி அமர்கிறோம்'' என்றார் அமர்நீதி.

'உட்காருங்கள்' என்றார் சிவத் தொண்டர். வேதியரை நமஸ்கரித்து ''இறைவா! நான் இது வரை மெய்யான தொண்டன் என்பது உண்மையென்றால் தராசுத் தட்டுகள் சமமாகட்டும்'' என்றபடி குடும்பத்தோடு ஏறி உட்கார்ந்தார் அமர்நீதி.

துண்டு வைத்த தட்டு மளமளவென உயர்ந்து சமமாகியது. ஆகாயத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது.

ரிஷப வாகனத்தில் சிவபெருமான் உமாதேவியரோடு காட்சி தந்தார். அமர்நீதி ஏறியிருந்த தராசே விமானமாகி வான வீதி நோக்கிச் சென்றது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர்!

புதிர் உலகம் விடைகள்!

I. முதலாமவர் சில்லறையாக இரண்டு ரூபாய் தந்தார். இரண்டாமவர் இரண்டு ரூபாய் தாளைத் தந்தார்.


II. கூடையில் இருந்த பழங்கள் 5 எனில் மூன்றாமவனிடம் கொடுத்தபோது 5x2 + 1 = 11. இரண்டாமவனிடம் கொடுத்த போது 11 x 2 +1 = 23. முதலாமவனிடம் கொடுத்தபோது 23 x 2 +1 = 47

III. பன்னிரண்டரை, ஒன்று, ஒன்றரை மணி

IV.

8	1	6
3	5	7
4	9	2

V. முதலில் மணி, கீதா 25 கி + 25கி அக்கரை செல்வார்கள். மணி திரும்பி வருவான். சுமதி 50கி. போவாள், கீதா திரும்பி வருவாள். மணி, கீதா போவார்கள். மணி திரும்பி வருவான். லக்ஷ்மி போவாள், கீதா திரும்புவாள். கடைசியாக மணி கீதா போவார் கள்.



குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பா	ர்	வ	தி	■	ன்	ர	ம	2 கு
ர	■	■	■	ரி	3 மா	■	■	டை
4 தி	ர	வ	ம்	■	■	■	ளி	■
தா	■	■	5 நா	■	6 கி	7 ர	8 க	ம்
ச	■	9 பூ	■	■	■	தி	■	ள
ன்	10 ய	ரி	11 கு	■	லை	■	■	டி
■	தி	■	■	■	12 பா	னி	ப	ட்
ழி	■	■	13 வா	ழை	■	■	■	ளை
14 வ	ளை	ய	ல்	■	ளை	த	த்	15 பி

கிரிக்கெட் க்விஸ் விடைகள்:

1. பி. சந்திரசேகர், பந்து வீசுபவர், 23 முறை
2. இந்தியாவின் அஜய் ரத்ராவும், வெஸ்ட் இன்டீஸின் 'ஜேகுப்'பும்.
3. வினூ மன்கட்
4. இங்கிலாந்து நாட்டின் 'டோனி'கிரேக்
5. இந்தியா-நியூஸிலாந்து இடையே 2002ல் நடைபெற்ற போட்டி
6. முகமது அசாருதீன் - 334 போட்டிகளில் விளையாடியுள்ளார்.
7. 24.4.1973
8. 1900
9. அனில் கும்ப்ளே, 8.2.1999ல் இந்தியா-பாகிஸ்தான் சென்னை போட்டியில்.
10. 'டக் ஒர்த் லீவி' முறையில். (Duck worth lewis system)



குருவி எங்கே கற்றது?

குருவிக் கூடு பார்த்தியா!
கொம்பு மேலே தொங்குது
குருவிக் கூடு பின்னவே
குருவி எங்கே படிச்சுது?

கம்பி போல நாரினைக்
கத்தி போன்ற அலகினால்
பிடித்து வேக மாகவே
பின்ன எங்கே கற்றது?

உள்ளே செல்லப் பாதையும்
உறங்கு தற்கு மெத்தையும்
இலவு போன்ற இறகினால்
நிரப்ப எப்படி தெரிந்தது?

சின்னக் குருவி செய்திடும்
சிக்க லான வேலையை
எந்த அறிஞ னாலுமே
எடுத்துச் செய்ய லாகுமா?

- நாகு. ஆறுமுகம்


கடலை ஆழப்படுத்துவது எப்படி?

சேது சமுத்திரத் திட்டம் என்பது பாக் ஜல சந்தியையும், மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்காக கப்பல்கள் சென்று வருவதற்கு வசதியாக கால்வாய் வெட்டும் திட்டமாகும். கால்வாய் வெட்டி, கடலை ஆழப்படுத்தும் பணி ஆரம்பித்து நடந்து வருகிறது.

கடலை எப்படி ஆழப்படுத்துவார்கள்? கடலிலிருந்து எடுக்கப்பட்ட மண்ணை எப்படி அப்புறப்படுத்துவார்கள்? இது போன்ற கேள்விகளுக்கு விளக்கம் தருகிறார் பொறியாளர் நரசய்யா. இவர் விசாகப்பட்டினம் துறைமுகத்தில் தலைமை இஞ்சினியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கடலை ஆழப்படுத்தும் பணியில் அனுபவம் வாய்ந்த இவர், உலக வங்கியின் ஆலோ





• நரசய்யா





சகராகவும் பணி புரிந்திருக்கிறார்.

கடலை ஆழப்படுத்தி, தூர் வாரும் பணியை ஆங்கிலத்தில் டிரெட்ஜிங் (dredging) என்று சொல்வார்கள். இந்தப் பணியைச் செய்வதற்கு வழக்கமான பயணிகள் கப்பலோ, சரக்குக் கப்பலோ பயன்படாது. தூர் வாரும் பணியைச் செய்வதற்கு ஏற்ற இயந்திரங்களைப் பொருத்தி பிரத்யேகமான கப்பல்கள் கட்டப்பட வேண்டும்.


ஹாலந்துதான் தூர் வாரும் கப்பல்களைக் கட்டுவதில் உலகின் நம்பர் ஒன் நாடு. இந்தியாவில் இப்போது சுமார் பன்னிரண்டு டிரெட்ஜிங் கப்பல்கள் இருக்கின்றன. தூர் வாரும் இயந்திரங்களை ஹாலந்திலிருந்து இறக்குமதி செய்து நம் நாட்டிலேயே டிரெட்ஜர் கப்பல்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு டிரெட்ஜர் கப்பலைக் கட்டுவதற்கு நூற்றைம்பது கோடி ரூபாய் வரை செலவாகும்.


பொதுவாக, அனைத்து துறைமுகங்களிலும் டிரெட்ஜர் கப்பல்கள் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். கப்பல் போக்குவரத்து, ஆறுகள் அடித்து வரும் மணல், அவை கடலில் கலக்கும் பகுதியில் சேருவது போன்ற காரணங்களால் சுமுகமான துறைமுகப் பணிகள் நடைபெறுவதற்கு, துறைமுகப் பகுதியில் உள்ள கடல் பகுதி சீரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அந்தப் பணியில் துறைமுகங்களில் டிரெட்ஜர் கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக கேரள ஆறுகளால் அடித்து வரப்படும் மணலை அகற்றி, கடலை ஆழமாக்கும் பணி, கொச்சின் துறைமுகத்தில் தினசரி நடைபெறுகிறது.

சேது சமுத்திரத்திலும் கடலை ஆழப்படுத்த டிரெட்ஜர் கப்பல்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மிக நீண்ட குழாய் ஒன்று கப்பலுடன் இணைக்கப்பட்டிருக்கும். அதனுள்ளே திடமான உருளை வடிவக் குழாய் ஒன்று இருக்கும். அதன் மறு முனையில் மின்சார விசிறி பாணியில் அமைந்த மண் வெட்டிகள் இருக்கும். இதற்குச் சற்றுத் தள்ளி, இன்னும் ஒரு நீளமான குழாய் பொருத்தப்பட்டிருக்கும். இந்த மொத்த இயந்திர அமைப்பையும் மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைப்பதற்கு வசதி இருக்கும்.

கடலின் தரைப்பரப்பில் அமரும்படியாக குழாய்கள் அட்ஜெஸ்ட் செய்யப்பட்டு, இயந்திரம் இயக்கப்படும். மண் வெட்டிப் பகுதி வேகமாய் கடலின் தரைப்பகுதியில் உள்ள மண்ணை வெட்டி எடுக்க,





அவை கடல் நீரில் பரவி சகதி போலாகும். பக்கத்தில் இருக்கும் நீண்ட குழாய் மூலம் வெட்டப்பட்ட மண் வேகமாய் உறிஞ்சப்படும். உறிஞ்சி எடுக்கப்பட்ட சகதி, குழாய் வழியே கப்பலுக்கு வந்து சேரும். கப்பலில் உள்ள பிரம்மாண்டமான தொட்டியில் அது சேகரிக்கப்படும். டிரெட்ஜர் கப்பலில் சகதி சேகரிக்கும் தொட்டியின் கொள்ளளவு சற்றேறக் குறைய ஐயாயிரம் டன். சகதி சேகரித்த தொட்டி நிரம்பியவுடன், கடலில் இறக்கப்பட்ட உபகரணங்கள் மறுபடி கப்பலுக்கே இழுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக, எடுக்கப்பட்ட சகதியைக் கடலிலேயே ஆழமான சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கே கொண்டு போய் வெளியேற்றுவார்கள். மறுபடியும் தூர் வார வேண்டிய இடத்துக்குத் திரும்பும் டிரெட்ஜர் கப்பல், தூர்வாரும் பணியைத் தொடரும்.

சேது சமுத்திரம் பகுதியில் இப்போது கடலின் ஆழம் பத்து, பன்னிரண்டு அடிதான் இருக்கிறது. சேது சமுத்திரக் கால்வாய் வழியே ஒரு கப்பல் தங்கு தடையின்றி சென்று வர வேண்டுமானால், கடலின் ஆழம் சுமார் முப்பது அடி வரை இருக்க வேண்டும். எனவே, சுமார் இருபது அடி அளவுக்கு கடலை ஆழப்படுத்தி, தூர் வாரினால், சேது சமுத்திரக் கால்வாயில் கப்பல் போக்குவரத்து சாத்தியமாகும்.

உலகில் வேறு எங்கேயாவது இது போன்ற திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பனாமா கால்வாய், சூயஸ் கால்வாய் போன்றவை நிலப் பகுதியினை வெட்டி, கால்வாய்களை உருவாக்கி, கடற்பகுதிகளுக்கிடையே இணைப்பை உருவாக்கிடும் நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்டவை. வட, தென் அமெரிக்கப் பகுதிகளுக்கு இடையே, பனாமா நாட்டின் நிலப் பகுதியில் வெட்டப்பட்டு, அட்லாண்டிக் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைப்பதுதான் பனாமா கால்வாய். எகிப்து நாட்டு நிலப்பகுதியில் மத்தியத் தரைக் கடலையும் செங்கடலையும் இணைப்பதற்காக வெட்டப்பட்டதுதான் சூயஸ் கால்வாய்! இதுபோல ஜெர்மனியில் வெட்டப்பட்ட கால்வாய் 'கீல்' கால்வாய் என்று அழைக்கப்படுகிறது.

தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி

சாதித்தார் சானியா!

"உலகத் தர வரிசையில் 50 இடங்களுக்குள் வருவதே என் லட்சியம்" என்று கூறியிருந்தார் சானியா மிர்சா. அந்த லட்சியத்தை அடைந்துவிட்டார் 18 வயதான சானியா.

அமெரிக்காவில் உள்ள சான்டியாகோவில் அகுரா கிளாஸிக் டென்னிஸ் போட்டிகள் நடந்தன.

இரண்டாவது சுற்றில் உலகத் தர வரிசையில் 8வது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் நதியா பெட்ரோவாவுடன் மோதினார். 6-2, 6-1 என்ற நேர் செட்களில் பெட்ரோவாவை அதிர்ச்சி தோல்வியடையச் செய்தார் சானியா.

இந்த வெற்றி மூலம் உலகத் தர வரிசையில் 48வது இடத்துக்கு முன்னேறியுள்ளார் சானியா. முதல் 50 இடங்களுக்குள் வந்த முதல் இந்திய வீராங்கனை சானியா என்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட்

இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையே இலங்கையில் ஒருதினப் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இலங்கை அணி விளையாடிய போட்டிகளில் ஒரே ஒரு ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளிடம் தோற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்துவிட்டது. இந்தியாவும் மேற்கிந்தியத் தீவுகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சம நிலையில் இருந்தன. இரண்டு அணிகளுக்கும் மிக முக்கியமான போட்டியாக அமைந்துவிட்டது ஆகஸ்ட் 6ந் தேதி நடந்த போட்டி. இந்தப் போட்டியில் யுவராஜ்சிங் சதம், முகமது கைஃப் அரை சதம் குவித்து அணியை நல்ல



■ டிராவிட்



■ கங்குலி

நிலைக்கு உயர்த்தினர். பிறகு ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றுப் போனது.



• ஜெயசூர்யா

இந்தியாவும் இலங்கையும் இறுதிப் போட்டியில் மோதின. முதலில் களம் இறங்கிய இலங்கை அணி அதிரடியாக விளையாடி 281 ரன்களைக் குவித்தது. பிறகு ஆடிய இந்திய அணி 263 ரன்களை எடுத்து தோல்வியடைந்தது. ராகுல் திராவிட் மட்டுமே சிறப்பாக விளையாடி 70 ரன்களைக் குவித்தார்.

இந்தப் போட்டிகளில் சௌரவ் கங்குலியும் ஜெயசூர்யாவும் 10,000 ரன்களைக் கடந்தது குறிப்பிடத்தக்கது.




• சானியா

அன்புடன்...

மிகச் சரியான தேர்வு!

'புலி வருது... புலி வருது' முதல் பரிசுக் கதை மிக நன்றாக எளிமையாய் புரியும்படி சிறப்பாக அமைந்திருந்தது. மிகச் சரியான தேர்வு! தண்டனையும் பாராட்டும் படக்கதை மூட நம்பிக்கையைத் தகர்க்கும் நல்ல கதை. படங்களும் அருமை!

- ராஜி ராதா, திருச்சி



சொக்கன் அவர்கள் எழுதிய 'வீட்டுக்குள்ளே கிரிக்கெட்' படிக்க மிகவும் சுவாரசியமாக இருந்தது. விளையாடினால் எப்படி சுவாரசியமாக இருக்கும் என்று நினைக்கும் பொழுது மனசு பலமடங்கு மகிழ்ச்சி அடைகிறது. சிறியவர்களை மட்டுமின்றி பெரியவர்களையும் கவரும் என்பதில் ஐயமில்லை!

- சிவ. மணவழகி, ஆதனூர்

புகழ் பெற்ற பொன்விழாக் கொண்டாடும் டிஸ்னிலேண்ட் குறித்து பல்வேறு செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. பசுமையைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் உணர்வை, சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சுப.வித்யாவின் 'புலி வருது... புலி வருது' சிறுகதை ஏற்படுத்தியது. ரஹேல் சித்திரக்கதை உழைப் பினைப் போற்ற வேண்டிய கருத்தினை பிரதிபலித்தது. ஈராக் பற்றிய பல்வேறு வரலாற்று, பண்டைய நாகரிகம், பண்பாடு, கலாசாரம் வளர்ந்த விதம் குழப்பமில்லாமல் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. மர்மப் புத்தகம்! தொடர் மாதந்தோறும் ஒரு வித சஸ்பென்ஸுடனே முடிவடைந்து ஆவல் மேலிட வைக்கிறது!

- சு. சாந்தி நெய்வேலி

'தண்டனையும் பாராட்டும்' படித்தேன். சுருங்கச் சொல்லி விளக்க வைத்த அக்கதை பிரமாதம். அரசர் முகத்தில் விழித்ததால் தண்டனை கிடைத்தது என்று அரசரிடமே நெத்தியடியாக கூறிய சந்திரன் இனி முகராசி பார்க்காதீர்கள் என்றது 100க்கு 100 சரி. அந்த மன்னருக்கு மட்டும் அல்ல, இன்று நம்மிடையே உள்ள பலருக்கும் இக்கதை ஒரு பாடம்.

- பி.ஆர். பார்த்தசாரதி, சென்னை

உலகில் அதிகம் பயிரிடப்படும் பயிர்களில் வாழை நான்காவது இடத்தில் இருக்கிறது. மலேஷியாதான் இதன் பூர்வீகம். தாவரவியல் கொள்கைப்படி வாழை மரமல்ல; உலகின் மிகப் பெரிய மூலிகைச் செடி. இந்தியாவுக்கு வந்த பேரரசர் அலெக்ஸாண்டர் தான் வாழைப் பழத்தை மேற்கத்திய நாடுகளுக்குக் கொண்டு சென்றார்.





* டாக்டர் சாந்தா

பொதுச்சேவை புரிபவர்களுக்கு ஆண்டுதோறும் பெருமை மிக்க மகசேசே விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அவ்விருது அடையார் கேன்சர் இன்ஸ்டிடியூட் தலைவர் டாக்டர் வி. சாந்தாவுக்கு வழங்கப்படுகிறது. 70 வயதாகும் டாக்டர் சாந்தா ஏழை மற்றும் கிராமப்புற பெண்களுக்குச் சிறந்த முறையில் புற்றுநோய் சிகிச்சை சேவை செய்து வருவதைப் பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் எலிகளுக்கான ரசிகர் மன்றம் செயல்பட்டு வருகிறது. இதில் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, நார்வே, இத்தாலி, அயர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த 430 பேர் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கின்றனர்!

புதிய கிரகம் கண்டுபிடிப்பு!

சூரியக் குடும்பத்தின் கடைசிக் கிரகமான புளூட்டோவுக்கு அப்பாலும் இன்னொரு கிரகம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க வானியல் நிபுணர் மைக் பிரவுன் அறிவித்துள்ளார். உறைநிலையில் உள்ள மீதேன் வாயுவால் ஆனது அப் புதிய கிரகம் என்கிறார். மைக் பிரவுனின் கண்டுபிடிப்பு சரியானதுதான் என்று சர்வதேச வானியல் ஆய்வுச் சங்கம் உறுதிப் படுத்த வேண்டும். அதற்குப் பிறகுதான் புதிய கிரகத்துக்குப் பெயர் சூட்டப்படும்.

பத்து வியாபாரிகள் வெளியூர் சென்று வியாபாரம் செய்து விட்டு கொழுத்த பணத்துடன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

''அந்த வைர ஹாரத்தை ஆசையாப் பார்த்தாயே! ஏன் வாங்கலே?'' என்று கேட்டான் ஒருவன்.

''அவன் புலி விலை சொல்றான்பா! சீ, போன்னு விட்டுட்டேன்'' என்றான் நண்பன்.



மாலதி

நாமளோ புலிப்பேர்!


'புலி' என்றால் பத்து. அது வியாபாரிகளின் சங்கேத பாஷை. மற்றவர்களுக்குப் புரியாது!

''பத்தாயிரம் ரொம்ப அதிகம்'' என அவனை ஆமோதித்தான் முதலில் கேள்வி கேட்டவன்.

''தாளனுங்க இந்தப் பாதையிலே நடமாட்ட முண்டு. சீக்கிரம் சத்திரத்துக்குப் போயிடணும்'' என்று கிசுகிசுத்தான் ஒருவன்.

'தாளன்' என்றால் கள்வன்.

நிஜமாகவே மூன்று கொள்



ளையர் சூழ்ந்துகொண்டனர். ஒருவன் கையில் கூர்மையாகப் பளபளக்கும் கத்தி. இன்னொருவன் அரிவாள் வைத்திருந்தான். மூன்றாமவன் கையில் கடப்பாரை.

எல்லாவற்றையும் பறித்து மூட்டை கட்டினர் திருடர்கள்.


''டேய், ரொம்பக் களைப்பாயிருக்கு! கொஞ்சம் ஓய்வெடுப்போம். இவங்களை நடனம் ஆடச் சொல்வோம்'' என்றான் ஒருவன்.

மறுக்க முடியுமா? உயிர் போய்விடுமே! 'தலைவிதியே' என்று கையை, காலை உதறி ஆடினார்கள்.

''என்னடா ஊமை டான்ஸ்! பாடுங்கடா'' என்று உத்தரவிட்டான் ஒருவன்.

தேவாரம், திருவாசகம், கும்மி, பள்ளுப் பாட்டு என்று அவரவருக்குத் தெரிந்ததைப் பாடினர்.

இவர்தான் அந்தப் பிரபலம்!



எம்.எஸ். சுவாமிநாதன்!

- ஜி.எஸ்.எஸ்

ஒரு வியாபாரி புத்திசாலி. அவன் பாடினான்.

''இராவணனுக்குப் பத்து
தலை!
திருமூர்த்தியிடம்
தோத்தானாம்
நாமளோ புலிப்பேர்;
தாளனோ திருப்பேர்!
சூலமும் சக்கரமும்
வேலுந்தான் தூங்குதையா!

தத்தாத்ரேயரைச் சுற்றி வந்தா சம்பத்துத் தந்திடுவார். அனுசூயா ஒருத்திதான் திருமூர்த்திகளை ஜெயிச்சவ- தா, தை, ததிங்கிண தோம்.''

எல்லா வியாபாரிகளுக்கும் பாட்டின் பொருளும் சூழ்நிலையும் புரிந்தது. 'ஆயுதங்கள் அனாதையாகக் கிடந்தன. நாமளோ பத்துபேர் , திருடர்கள் மூன்று பேர் - மூன்று பேர் சேர்ந்து ஒரு கள்வனைக் கட்டிப் பிடிச்சா நகை, பணமெல்லாம் திரும்பக் கிடைக்கும். அனுசூயா புருஷன் பத்தாவது ஆளா திருடர்களுடைய உடுப்பால் கட்டவோ, ஆயுதத்தால் மயக்கமடையுமளவு தாக்கவோ செய்யணும்.' இதுதான் பாட்டின் பொருள்.

திடீரென மும்மூன்று பேராகப் பிரிந்து திருடர்களைக் கட்டிப்பிடித்தனர். கத்தி, கடப்பாரையால் லேசாகத் தாக்கினான் அனுசூயா புருஷன்.

அவரவர் அணிந்த துணியைக் கிழித்துக் கட்டி விட்டு தத்தம் உடைமைகளோடு அங்கிருந்து விரைந்து சென்றனர்.

மிஸ் ஏரி!


கதை : ஸ்ரீரா. ரவிவர்மன்
படம்: சேகர்

ஏரி, மீன்கள், டீனு, ராஜா, கண்ணாடித்தொட்டி

 யில் உள்ள  களில்  மிக அழகானது. அடிக்கடி தண்ணீருக்கு மேல் வந்து அழகைக் காட்டும். மற்ற  ''இப்படி செய்யாதே  யாராவது பிடிச்சிட்டுப் போவார்கள்'' என எச்சரித்தன. ''நான் மிஸ்  யாக இருப்பதில் உங்களுக்குப் பொறாமை''என்று கூறியது

ஒருநாள்  சந்தோஷமாகப் பாடிக் கொண்டே வந்தது. மற்ற  காரணம் கேட்டன. ''என் அழகை  என்ற சிறுவன் பாராட்டினான். நாளை அவனுடன் போகப் போறேன். இந்த அழுக்கு  யில் என்னைப் போன்ற அழகி வாழக் கூடாது'' என்றது  ''நீ போகாதே ஆபத்து'' என்று எச்சரித்தன மற்ற .

மறுநாள் காலை கரையருகே சென்றது    வைப் பிடித்துக் கொண்டு போய்  யில் போட்டான். ''ஐயோ! என் கர்வத்தால் இப்படி  க்குள் சிறைபட்டு விட்டேனே!'' என வருந்தியது 

145 மெடல் வாங்கிய அபூர்வ சரோஜினி!

ஒரு பொழுதுபோக்குக்காக, என்றாவது ஒரு நாள் நடுக்கடலில் சிக்கிக் கொண்டால், அதிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ள... என்றுதான் சரோஜினி முதன்முறையாக நீச்சல் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். எட்டு வயதில் விளையாட்டாக ஆரம்பித்த இப் பழக்கம் இன்று இவரைத் தமிழகத்தின் முன்னணி நீச்சல் வீராங்கனையாக்கியிருக்கிறது.

உள்ளூர் முதல் தேசிய அளவிலான போட்டிவரை 145 மெடல்கள் வாங்கிக் குவித்திருக்கிறார் இவர். வீட்டுக்குச் சென்றால் ஓர் அலமாரியில் மலை போல் கோப்பைகளும் மெடல்களும் குவிந்திருக்கின்றன. உற்சாகமாய் நம்மிடம் தன் சாதனைகளைப் பற்றிப் பேசினார்.





145 மெடல்கள் போதுமா

சரோஜினி?

இல்லை, இதெல்லாம் தொடக்கம்தான். நேஷனல் லெவல்ல இதுவரைக்கும் தங்கம் வாங்கலை. ஆறு வெண்கலங்கள் வாங்கினாலும் தங்கத்துக்காக கடுமையா போராடிட்டு இருக்கேன்.

பள்ளிப் படிப்பு - நீச்சல் பயிற்சி, சமாளிக்க முடியுதா?

சமாளிச்சுக்கறேன். காலையில ஐந்து மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி ஷெனாய் நகர்ல நீச்சல் பயிற்சி. அங்கிருந்து அப்படியே ஸ்கூலுக்குப் போவேன். மாலையில ஸ்கூலிலிருந்து நேரா மறுபடியும் நீச்சல் பயிற்சிக்குப் போய் இரவு 8 மணிக்குத்தான் வீடு வந்து சேர்வேன். இடையில கிடைக்கிற நேரத்துலதான் படிப்பேன், தூங்குவேன்.

பொழுதுபோக்கா ஆரம்பிச்ச நீச்சல்ல எப்படி இவ்வளவு தூரம் சாதிக்க முடிந்தது?

என் கோச் டி. சந்திரசேகர் தான் எனக்குள்ள இருக்கிற திறமையை வெளில கொண்டு வந்தார். நீச்சல் கத்துக்க ஆரம்பிச்ச ஆறே மாசத்துல பேக் ஸ்ட்ரோக் பிரிவுல வெள்ளிப் பதக்கம் வென்றேன். அதுதான் என் பயணத்தைத் தொடங்கி வைச்சது.

சென்னை கமிஷனர் நடராஜ் பாராட்டினாராமே?

அப்பா வடபழனி காவல் நிலையத்துல தலைமை காவலரா பணிபுரியறார். நான் மாநில அளவுல பன்னிரண்டு ரெக்கார்டுகளை முறியடிச்சிருக்கேன். இதைக் கேள்விப்பட்ட W.I. தேவாரம் சார் 'ஒரு காவலரின் மகள் நீச்சல் போட்டியில இத்தனை சாதனை புரிந்திருக்கிறாளா!' என ஆச்சர்யப்பட்டு சென்னை கமிஷனருக்கு கடிதம் எழுதினார். கமிஷனர் நடராஜ் சாரும் என்னை அழைத்து ரொம்பவும் ஊக்கப்படுத்தினார். ஐயாயிரம் ரூபாய்க்குத் தேவையான உபகரணங்கள் வாங்கித் தந்தார். இன்னும் நீ நிறைய சாதிக்கணும்னு வாழ்த்தினார்.


நீச்சல் கற்றுக்

• கமிஷனரின் பாராட்டு!



கொள்வதால் என்னென்ன பயன்கள்?

நிறைய இருக்கு. சின்ன வயசுலேயே கட்டுக்கோப்பா வாழ முடியும். எந்தவிதத்திலும் கவனம் திசை திரும்ப வாய்ப்பிருக்காது. உடலுக்கு அற்புதமான எக்சர்ஸைஸ். அதோட நீச்சல் கத்துக்கிட்டா நல்லா படிப்பு வரும். நான்கூட பத்தாவது பொதுத்தேர்வுல 85% எடுக்கப் போறேன் பாருங்களேன்.





* கோச் உடன் சரோஜினி

நீச்சலில் எந்த மாநிலம் முன்னணியில இருக்கு?

கர்நாடகா, மஹாராஷ்டிரா. இங்க மாதிரி அவங்களுக்குப் படிப்பு - பயிற்சின்னு இரண்டு சுமைகள் கிடையாது. படிப்பு அவங்க திறமையை அழுத்தறதில்லை. நீச்சல் பயிற்சிக்குதான் அதிக முக்கியத்துவம் கொடுப்பாங்க.

காணும் கனவுகள்?

அப்பாவை நான் வியந்து பார்க்குற மாதிரி நானும் போலீஸ்ல சேர்ந்து ஐ.பி.எஸ் அதிகாரியாகணும். 2012 ஒலிம்பிக்ல தங்கம் வெல்லணும்!

- ச.ந.கண்ணன்

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. டெய்சி டக் இமை, 2. மிக்கி மூக்கு, 3. கூஃபி கை, 4. மின்னி ரிப்பன், 5. புளூட்டோவின் கழுத்து வளையம், 6. டொனால்ட் டக் சட்டை, 7. கூஃபி தொப்பி, 8. புளூட்டோ காது, 9. டெய்சி டக் பாவாடை, 10. மிக்கி வாய்.



அமைதி

கிராமத்து திருவிழாவில் கலந்து கொண்டு விட்டு ராம், ராதா திரும்பிக் கொண்டிருந்தனர்.

"அப்பா, திருவிழாவில் ஸ்பீக்கர் அலறியதில் அம்மாவுக்கு காது வலியே வந்துடுச்சு. முதல்ல ஒரு டாக்டரைப் பார்க்கணும்" என்றான் ராம்.

ஏதோ சிறு ஊர்வலம் வர வண்டி நின்றது.

"எங்கே பார்த்தாலும் ட்ராஃபிக் ஜாம்..." என்று எரிச்சலடைந்தார் அப்பா.

அப்போது பின்னால் நின்ற லாரி ஒன்று தொடர்ந்து கர்ண கொடூரமாக ஹார்ன் எழுப்பிக் கொண்டிருந்தது.

பொறுமையிழந்த அப்பா வண்டியை விட்டு இறங்கி "ஏன் இப்படி ஹார்ன் அடிக்கறே? ஏற்கனவே காது வலியில இருக்காங்க. நீ இன்னும் வலியை அதிகப் படுத்தறியே?" என்றார்.

"என்ன சார், நான் ஹார்ன் அடிக்கிறதிலேயா காது வலி வருது?" என்றார் லாரி டிரைவர்.

"91 டெசிபல் அளவைத் தாண்டினால் ஒலி மாசுபாடு என்று அர்த்தம். இந்த அளவுக்கு மேற்பட்ட ஒலி சுற்றுச் சூழலைப் பெரிதும் பாதிக்கிறது. இதனால் காது கேளாமை, இரத்த அழுத்தம், இதய நோய்கள் போன்றவை கூட உண்டாகும்" என்றார் அப்பா.

லாரி டிரைவர் மன்னிப்புக் கேட்டார்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka